பாலர் கல்வி

தொகுதி 6	1941 ஹு செப்டெம்பர் மீ விஷு ஹு புரட்டாசி மீ	பகுதி 6

சிறுவர் கைவேலை—ஒரு பாட திட்டம்

—

S ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

சுவரை வைத்துக்கொண்டு சித்திரம் எழுத வேண்டும்

இது ஒரு பழமொழி. எந்நாளும் அர்த்த புஷ்டியுடன் கூடிய பழைய மொழி. ஆரம்பக் கல்வித் திட்டம் ஒன்றை அமைக்க இது ஒரு தீபஸ்தம்பம் மாதிரி வழி காட்டும் பழமொழி. ஒரு சுவர் இருந்தால் சித்திரம் எழுத முடியும். ஆரம்பக் கல்வியே நமது சித்திரமா யிருந்தால் அதன் சுவரின் அமைப்பையும் அனுசரித்தே சித்திரம் எழுதவேண்டும். ஒரு சிறு கோயில், வீடு, பள்ளிக்கூடம் கட்ட குறைந்தது நான்கு சுவர்களாவது எழுப்ப வேண்டும்: சித்திரக் கல்வியின் எல்லையும் நமக்குத் தெரிய வேண்டும். பழைய பெருமையை நிலைநாட்டி வருங்கால தேசமுன்னேற்றத்திற்கு அனுகுணமான சுகஜீவிகளும் சத்பிரஜைகளுமான மக்கள் தோன்றச் செய்வதே நமது பொறுப்பாகும். இது போன்ற சித்திரத்தை எழுத மேலே சொன்ன நான்கு சுவர்களின் அமைப்பையும் கவனிக்கவேண்டி யிருக்கிறது.

1. குழந்தை செய்துகற்கும் முறையை சுலபமாய் ஏற்றுக்கொள்கிறது.

குழந்தை சக்திஸ்வரூபம் என்றும் பல சக்திகளோடு கூடியது என்றும் பலதடவை கண்டு கேட்டு படித்திருக்கிறோம். மணலில் விளையாடி கிளிக்கூடு கட்டுதல், மண்மலை எழுப்புதல், கற்கள்கொண்டு வீடு எழுப்புதல், கொட்டாங்கச்சிகொண்டு பிட்டு சமைத்தல், நுணுக்காய் ஈர்க்குச்சிகொண்டு தேர் கட்டுதல், தென்னங் குரும்பைக்கொண்டு

பம்பரம், வண்டிகள் செய்தல் இவை சில உதாரணங்களாகும். சற்றே பெரிய குழந்தைகள் எலுமிச்சம்பழ மூடியைக்கொண்டு தராசு பண்ணுவார்கள். கொருக்கைத்தட்டையில் ஊற்றுப்பேனா பண்ணுவதையும் யான் பார்த்திருக்கிறேன். விளையாட்டுச் சாமான்களான காற்றாடிகள் பண்ணுவதும் இவர்கள் செய்கையைக்காட்டும். பெண்களோ களிமண் கொண்டு சொப்பு, பழம், பொம்மை, பாத்திரம், அடுப்பு இவை செய்து விடுவார்கள். மணிகள்கொண்டு நேர்த்தியான அழகான உருவங்கள் செய்வதிலும் வல்லவர்கள். இதே செய்கை சக்தியை ஓங்கச்செய்து கல்விக்குச் சாதனமாகக்கொண்டு கல்வியை மேலோங்கச் செய்ய வேண்டுமென்பது கல்விச் சித்திரச் சுவரில் ஒரு அம்சம்.

2. வருங்காலக் கல்விப்போக்கு.

வருங்காலத்தில் சமஸ்த ஜனங்களும் கல்வி யறிவுள்ளவர்களாக வேண்டும். அதன்பொருட்டே படிக்கத் தெரியாத குழந்தைகளே ஊரில் இருக்கக்கூடாது. வராத குழந்தைகளை உபாத்தியாயரே தூண்டுதல்செய்து பள்ளிக்கு அழைத்துவந்து கல்வியறிவுள்ளவர்களாகச் செய்யவேண்டுமென்பது தற்கால தர்மம்.

ஆனால் தரித்திரம் தாண்டவமாடுகிற இக் காலத்தில் படித்த படிப்பு பிழைப்புக்கு வழியில்லாமற் செய்துவிட்டாலும், பிழைப்புக்கு இடைஞ்சலா யிருந்தாலும் படிப்பை வேண்டிவருபவர் பலர் இலர். இக் குறையை நீக்கத்தக்கவாறு சித்திரம் எழுதுவதில் ஒரு சுவர் எழுப்ப வேண்டும். ஆகவே ஜீவனத்துக்கு ஆதாரமான கல்வியைச் சேர்த்தே ஊட்டவேண்டி யிருக்கிறது.

3. கல்வி ஸ்தாபனங்கள் ஏற்படும் கிராமங்களின் அமைப்பும் நிலைமையும்.

கிராமத்தார் பலர் வியவசாயிகள். மற்றும் சிலர் நானாவித உப தொழில்களைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொருவனும் தனது உணவு, உடை, இல்லம் இவற்றைக் குறித்தே பாடுபட நேரிடுகிறது. இவைகளே நமது முதற் தேவைகள். தனது தேவைக்குத் தக்கபிரகாரம் தமது ஊரில் உள்ள இயற்கை வசதிகளைக் கையாளப் போதுமான யோசனை, யுக்தி, சக்திகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறு பல தொழில்கள் செய்கிற பல குடும்பங்களிலிருந்து வருகிற குழந்தைகளை ஒரேவிதமான படிப்பு முறையில் பழக்குவது எப்படி? வசதிகள், தேவைகள், இவைகளையும் கலந்தே சிததிரம் எழுதச் சுவர் எழுப்ப வேண்டியிருக்கிறது.

4. சமூக க்ஷேமமும் பரஸ்பர உதவியும்

ஒரு விவசாயிக்கு தச்சனது உதவியும் கருமானுடைய உதவியும் தேவையாயிருக்கிறது. வீடுகட்டுகிற எனக்கு தச்சன், கருமான்

தொத்தன், சிற்றுள் இவர்களுடைய உதவி அவசியமா யிருக்கிறது. ஒரு குடும்பஸ்தனுக்கு இவர்கள் அன்றி வண்ணுன், அம்பட்டன், தோட்டக்காரன், பாற்காரன், வியாபாரி எல்லோருடைய உதவியும் வேண்டியிருக்கிறது. நான் எப்படி அவர்களின் உதவியால் முன்னேற விரும்புகிறேனே அம்மாதிரி அவர்களும் என்னுடைய உதவியால் முன்னேங்கக் கடமைபட்டவர்கள். சித்திரம் எழுதப்படும் நான் காவது சுவர் இத்தன்மையுடையது. பலபேரின் கூட்டுரவும், உழைப்பும். என் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கும் வேண்டும். என் பள்ளிக்கூடமும் அவர்களுக்கு உதவியா யிருக்கவேண்டும். நேர்முக பார்க்குமிடத்து தொழிற் கல்வியும் முதியோர் கல்வியும் இதில் அடங்கியுள்ளது.

ஆகவே கல்வி சித்திரத்தில் கைத்தொழிலுக்கு இடமுண்டு என்று மேலே எழுப்பப்பட்ட நான்கு சாதனங்களாகிய நான்கு சுவர்களும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

சிறுவர் கைத்தொழில் அல்லது கைவேலையின் லக்ஷணங்கள்

1. சுலபமாய்க் கிடைக்கும் வஸ்துக்கள்.

சில வருஷங்களுக்கு முன்னல் ஆரம்ப வகுப்புக் கால அட்டவணை யில் "கிண்டர்கார்டன்" என்று குறிப்பிட்டு அந்நேரத்தில் காகிதம் மடித்தல், கத்தரித்தல், குச்சிவைத்தல், கொட்டைவைத்தல் போன்ற சிலவைகளை அனுஷ்டித்து வந்தார்கள். கிண்டர்கார்டன் என்பது குழந்தைக் கல்விமுறை என்பது பொருள்படும். தனிப்பாடம் ஆகாது. தாமாகவே செய்கைமூலம் கற்பது என்றும் ஒருவாறு சொல்லப்படும். அனுஷ்டானத்தில் இப்பாடம் சுலபமாய்க் கிடைக்கக்கூடும். காகிதம், களிமண், குச்சி, விதை, கட்டை, வளையம், மணல், குரும்பை, இவை களைக்கொண்ட கைவேலையாகவே இருந்தது.

2. உபயோகமான பண்டங்கள்.

செய்கிற சாமான்கள் தினசரி உபயோகத்திற்கு ஏற்றதாகவே யிருக்கவேண்டுமென்று வலைப்பை பின்னுதல், நாடா பின்னுதல், பாய் முடைதல், தட்டி செய்தல், கயிறு திரித்தல், இவைகளில் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. தற்காலத்திலும் இவற்றை அனுஷ்டித்து வருகிறோம்.

3. அழகான வஸ்துக்கள்.

காகிதங்களில் வித விதமான விசிறிகள், புஷ்பங்கள், புஷ்ப மாலைகள், தொங்கவிடும் விளக்குகள், பஞ்சினுல் கொக்கு வாத்து முதலிய பக்ஷிகள் செய்வதை பார்க்க மிக அழகாகத்தான் இருக்கிறது. அலங்கார மண்டபம் ஜோடிக்க இவை உபயோகப்படும். பெண்கள் புட்டியினுள் மரம் இறக்கி பக்ஷிகள் வைத்தும், பின்னல் கோலாட்டம் போடுவதுபோல் பொம்மைகள் இறக்கியும் அழகான காரியங்கள் செய்

வார்கள். பூநூல்கொண்டு அட்டையில் பலவித உருவங்களைத் தைப்பார்கள். இவைகள் அழகுக்கு மாத்திரம்தான். வாசற்படியில் குழாய் மணிகொண்டு "நல்வரவு" கட்டி தொங்கவிடுவதும் இந்த இனத்தில் சேர்ந்ததாகும்.

4. பாடங்களை அனுசரித்த கைவேலை.

பட்டுப்பூச்சி வளர்த்தல் என்று ஒரு விஷயத்தை உபாத்திமைத் தொழிலைப் பின்பற்றின ஒரு தம்பதிகளும் அவரது குடும்பத்தாரும் அவர்களது பள்ளிக்கூடத்தில் நடத்திக் காட்டியபொழுது பூச்சிகள் முட்டை வைக்க, புழுக்களை வளர்க்க, கூடுகட்ட வெவ்வேறு தட்டுகளைத் தாங்களும் தங்களிடம் படிக்கும் குழந்தைகளும் செய்து வைத்திருந்த ஒரு பொருள்காட்சியைப் பார்க்க நேர்ந்தது. அத்துடன் பட்டுநூல் எடுத்துச் சுற்றவும், தறிபோடவும் தாமே சில சாதனங்களைப் பண்ணியும் வைத்திருந்தனர். இவ்விஷயத்தில் தொழில் படிப்பும், பொது விஷயங்களைப்பற்றின அறிவும் நிரம்பியிருக்கிறது. வாழ்க்கை சம்பந்தமான விஷயங்களை அடிப்படையாகக் கொண்ட பாடதிட்டத்திலும் இம்மாதிரி கைவேலைகளுக்கு இடமுண்டு. ஊர், பருவகாலம், கிடைக்கும் வஸ்துக்கள் இவற்றைக்கொண்டும் இக்கைவேலைகளை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது.

5. அவசியமாக வேண்டிய, உபயோகமாயுள்ள, சேலாவணியாகக்கூடிய கைவேலைத் திட்டம்

இவை சற்றே வயதான குழந்தைகளுக்குப் பொருத்தமானவையே. நமது தேசத்தில் முதன்மையான தொழில் விவசாயம், இரண்டாவது துணிநெய்தல். தோட்டம் போடுவது முதல் வேலைக்கு அடிப்படையானது. நூல் நூற்கக் கற்றல் இரண்டாவதற்கு அடிப்படையானது. ஆகவே வார்தா திட்டத்தின்கீழ் நூல்நூற்றல் என்பது ஒரு முக்கிய அடிப்படைக்கல்வியாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அத்துடன் தச்சுவேலை, அட்டைவேலை, பாய்பின்னுதல் பல பாகங்களும் காணப்படுகின்றன. சில பள்ளிக்கூடங்களில் இதுசம்பந்தமாக பருத்திச் செடி வளர்த்தல், பஞ்சு சேகரித்தல், கொட்டை எடுத்தல், வில் அடித்துப் பட்டை போடுதல், நூல் நூற்றல் என்றவாறு படிப்படியாகப் பல பாகங்களை சொல்லிக்கொடுக்கிறார்கள். இப்பழக்கம் ஒரே தொழிலில் நன்கு தேர்ச்சியடைய போதுமான அஸ்திவாரம் ஆகும்.

மேலே சொன்ன ஐந்து விஷயங்களையும் கவனத்தில் வைத்து ஆரம்பப் பள்ளிக்கூடத்திலுள்ள ஐந்து வகுப்புகளுக்கும் அனுசரிக்கக்கூடிய ஒரு வருஷத்திற்குப் போதுமான கைவேலைதிட்டம் தயாரிக்க வேண்டியிருக்கிறது. அதே நோக்கத்துடன் கீழே ஒரு பாடதிட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைத் தேவைக்குத் தக்கபிரகாரம் மாற்றியோ விசேஷப்படுத்தியோ அனுசரிக்கலாம்.

சிறுவர் கைவேலை வருஷ பாடதிட்டம்

முதல் வகுப்பு

புதிதாகச் சேர்க்கப்பட்டவர்

(1) புலன்கள் பயிற்சிக்கு ஏற்ற உபகரணங்களைக் கையாளுதல்
(2) மணி கோத்தல்
(3) போல் குழாய்கள், குழாய் மணி, கொருக்கைத்தட்டை கோத்தல்
(4) படம் கத்தரித்து ஒட்டுதல்
(5) காகிதம் கத்தரித்தல்
(6) நுணுக்காய், கோவைக்காய் குரும்பை, ஈர்க்குச்சி வைத்து உருவங்கள் அமைத்தல்
(7) மணலில் உரு அமைத்தல் கிணறு, குளம், வயல், கூண்டு
(8) கட்டை கட்டுதல் ரயில், வீடு, கோபுரம், கிணறு, பாலம்
(9) களிமண் வேலை பழம், வீட்டு சாமான்
(10) சுயேச்சையான சித்திரம் வரைதல்
(11) இன்ஸெட் வைத்து விளையாடுதல்
(12) சாதாரண சாமான்களின் உரு இன்ஸெட் வைத்து விளையாடுதல்

பள்ளிக்கூடத்தில் சற்றே பழகினவர்கள்

(1) காகிதச் சங்கிலி
காகிதக் கொடி
காகிதவேலை மடித்தல்
ஷை கிழித்தல்
ஷை கத்தரித்தல்
காகித விசிறிகள்
(2) சட்டத்தில் நெய்தல் மாதிரி செய்தல்
நெசவு விளையாட்டுகள்
(*a*) தாண்டுதல்
(*b*) பின்னல்கோலாட்டம்
(3) மணி கோத்தல்
(4) கட்டைகொண்டு உருவமைத்தல். களிமண் கல்கொண்டும் பழைய நெருப்புப் பெட்டி கொண்டும் உருவமைத்தல்
(5) படங்களில் வெட்டப்பட்ட உருவங்களைச் சரியாய்ப் பதிய வைத்தல்
(6) முந்தின பாடட்திடத்தின் கீழ் காட்டிய 6, 7, 9, 10 இவைகளை நடத்துதல்
(7) 1 முதல் 30 வரையில் எண்களைக் கத்தரித்து நீண்ட காகிதத்தில் ஒட்டுதல்
(8) படங்கள் ஒட்டுதல்.

வகுப்பு 2.

A. சுலபமான கைவேலை.

1. முதல் வகுப்புப்படி கட்டைகள் கட்டும் அப்பியாசம்.
2. வர்ணக்காகிதம் கொண்டு மடித்தல், வெட்டுதல்
3. வெட்டப்பட்ட துண்டுகளை அலங்காரமாக வைக்கக் கற்றுக் கொள்ளுதல்.
4. பட்டம், காற்ருடி.

5. பழுப்புக் காகித நோட் புஸ்தகத்தில் படங்களை ஒட்டுதல்.
6. நிறம் மாறிமாறி வரும்படி மணி கோத்தல்.
7. காகிதக் குடை.

B. பாடங்களை ஒட்டிய கைவேலை.

குழாய்மணி, கொருக்கைத்தட்டை கோத்துத் தொங்கவிடுதல். தேதிப்பெட்டி செய்தல். (1 முதல் 30 எண்கள்) சோப்புப் பெட்டி உபயோகிக்கவும்.

களிமண் வேலை.

களிமண்ணால் பலவித சிறுகற்களை அவைகளுக்கேற்ற அச்சுகள் கொண்டு செய்யவும்.

C. நன்றாகக்கற்றும் தேரக்கூடிய கைவேலை.

பாய்த்தறியில் பாய் செய்யக்கற்றுக் கொள்ளுதல்.

வகுப்பு மூன்று

1. சுலபமான மெல்லிய அட்டை வேலை. நாற்காலி சாய்மனை, (சதுரக்கட்டங்கள் போட்டு.)

2. காகித வேலை—பூ செய்தல்.
இரண்டு பக்கமும் சமமாகவுள்ள உருவங்கள் ஒட்டுதல்.

3. ஊசிகுத்திக் கோத்தல்.
4. தோட்டத்தில் மணல் வேலை.
5. (தங்களது ஊரின் படம் வரைதல்)

பாடத்துடன் இணைந்த கைவேலை.

1. வீடு, மரம் செய்து கிராமப் பிளானில் வைத்தல்.
2. அச்சுக்களில் செய்த கற்களைக்கொண்டு சதுர, நீண்ட சதுர இடங்களுக்குக் கற்கள் பரப்புதல்.
3. கடிகாரங்கள்.
4. படங்கள் சேர்த்து ஒட்டுதல் (*a*) வியாசம்.
(*b*) இதர பாடங்கள் சம்பந்தமாக.

தேர்ச்சி பெறவேண்டிய கைவேலை.

காகிதப்பாய்—பல தினுசுகள்.
பனை ஓலைத்தடுக்குகள் (சாயங்கொடுத்த ஓலைகள்)

வகுப்பு நான்கு

சுலபமான கைவேலை

(1) மெல்லிய அட்டை வேலை. (தட்டு, சோப்புப் பெட்டி).
(2) கவர்கள்.

(3) பக்ஷி கூண்டு.
(4) காகிதத் தோரணம்.
(5) நெருப்புப் பெட்டி. அலமாரி.
(6) தொப்பி தைத்தல்.

பாடங்களுடன் ஒட்டிய கைவேலை

தென்னங் குருத்து தோரணம்—அச்சுகள் கொண்டு பெரிய கற்கள், ஓடுகள் தயாரித்தல்—பலவித கியாலண்டர்கள்—படங்கள் கொண்டு பொம்மைகள் செய்தல்—தையல் வேலை, கைக்குட்டை செய்தல்—ஓரம் தைத்தல்.

பெண்களுக்காக

பூத்தொடுத்தல்—கம்பளி நூல்—பந்து—அழகான புஷ்பங்களின் மாதிரிகள்—பொத்தான் தொங்கவிடப் பின்னல்நூல்—அட்டை வேலை. பொம்மைகளுக்கு உடுப்பு தைத்தல்—கோலம் போடுதல்.

தேர்ச்சி பெறவேண்டிய கைவேலை

நூல் நூற்றல் (தக்ளி, சர்க்கா) (ராட்டினம்.)
(அதற்குப் பீடிகையான அப்பியாசங்களில் பழக்கமான பிறகு).

ஐந்தாம் வகுப்பு

(1) அட்டை வேலை. செய்த உருவங்களை ஒரு கிராமம் மாதிரி அமைத்துக் காட்டுதல்,
(2) அட்டை, காலிகோ வேலை.
(3) தகரம், அட்டை வெட்டி சித்திரங்கள் வரைதல்.
(4) வலைப்பை.

பாடங்களுடன் இணைந்த வேலை

பஞ்சு துணி இவைகளில் பொம்மை—சூளை போடுதல்—சினிமாப் படங்கள்போல் படங்கள் சேர்த்து ஒட்டிச் சுற்றுதல்—படத்திற்குக் கண்ணாடி போடுதல், காலிகோ, காகிதம் இவை ஓரத்திற்கு ஒட்டுதல்.

பெண்கள்

1. பூநூல் வேலை.
2. தையல் வேலை.
3. பொம்மைகளுக்கு உடுப்பு தைத்தல்.
4. கோலம் போடுதல்.

எல்லாரும் தேர்ச்சிபெற வேண்டியது

(1) தட்டி பின்னுதல் மூங்கில் } ஏதாவது ஒன்று மாத்திரம்.
ஷை ஈர்க்குச்சி
ஷை விளாமிச்சிவேர்
(2) கைத்தறி நெசவு—பெரிய பிள்ளைகள் மாத்திரம்,

சிலருக்கு.

மரப் பொம்மைகள்—சுலபமான மரவேலை—நார் திரித்தல்.

சித்திரம் வரையப் பயிற்சி.

புராதன நாகரிகத்தில் சித்திரங்களே எழுத்துக்களுக்குப் பதிலாக இருந்து மனிதனின் எண்ணங்களை வெளியிட்டுவந்தன. சித்திரங்கள், கல்வெட்டுகள், அபூர்வமான சிற்பவேலைகள், இக்காலத்துப் பழங்கதைகளையும் புராணக் கதைகளையும் நமது நாட்டு ஜனங்களுக்குத் தெரிவித்து வருகின்றன. குழந்தைகளுக்கும் சித்திரம் வரைதலில் இயற்கையாகவே ஒரு ஆசை இருக்கிறது. எப்படி பல சக்திகள் மங்கிக் கிடக்கின்றனவோ அவ்வாறு தற்காலத்தில் நம்மவர் பலருக்கு கைத்தொழில் சக்தி, சித்திரம் வரைதல் சக்தி மழுங்கியிருக்கலாம். “சித்திரமும் கைப்பழக்கம்” என்கிறமாதிரி பழக்கம் கொடுப்பது அவசியம். பெண்கள் கோலம்போடுதல் சித்திரப்பழக்கமே. கைவேலைப் பயிற்சியிலும் அஸ்திவாரமாகக் காணப்படுவது சித்திரம் வரைதல் பயிற்சிதான். சுயேச்சையான சித்திரம், இயற்கையைக் கவனித்து சித்திரம் வரைதல், வர்ணங்களால் தூரிகைகள் கொண்டு சித்திரம் வரைதல் என்பவைகளைப் படிப்படியாக அனுசரிக்கலாம்.

ஒழிவுநேரப் போழுதுபோக்கு.

ஒழிவுநேரப் பொழுதுபோக்கு பணலாபத்தை உத்தேசித்து அல்ல. தன்மனது பிரியமாய் நாடும் விஷயங்களில் கவனத்தைச் செலுத்துவதுதான். சங்கீதம், தோட்டவேலை, பிராணிகளை வளர்த்தல், உல்லாசப் பிரயாணம், கதைப்புஸ்தகம் படித்தல், பஜனை, சுலபமான தச்சுவேலை இவை சிலருடைய ஒழிவுநேரப் பொழுதுபோக்குக் காரியங்கள் ஆகும். குழந்தைகளில் சிலர் படங்கள் சேர்த்தல், ஸ்டாம்பு சேர்த்தல், நெருப்புப்பெட்டி படங்கள் சேர்த்தல், பக்ஷி இறகு சேர்த்தல் என்பவைகளில் கவனம் செலுத்திவருகிறார்கள். பற்பல பெரிய மனிதர்களுக்கும் இம்மாதிரி விஷயங்களில் பற்றுதல் உண்டு. காலஞ்சென்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் ஒழிவுநேரப் பொழுதுபோக்கு ஸ்டாம்புகள் சேர்ப்பது என்று யான் படித்திருக்கிறேன். இவ்விஷயத்தில் பற்றுதல் அவசியமாகும். இதை மற்றும் பூரா நல்லவழியில் திருப்பலாம் என்று தோன்றுகிறது. அதாவது,

வீணாகப்போகிற பண்டங்களைப் பிரயோஜனமாகச் செய்வது

1. பச்சைக் கத்தாழையிலிருந்து சுலபமான முறையில் நார் எடுத்துக் காயவைத்து சாயம்பூசி தலைமயிர்ப் பின்னல்போல் பின்னி கயிறு திரித்து அக்கயிற்றைக்கொண்டு வலைப்பைப் பின்னுவதை நேரில் கண்டறிய நேர்ந்தது. எனக்கு இது சந்தோஷத்தையும் வியப்பையும் உண்டுபண்ணியது.

2. சில வீடுகளில் பழங்கடுதாசுகளைச் சுக்கு சுக்காகக் கிழித்து வெந்தயத்துடன் ஊறவைத்து அரைத்துக் கூழாக்கி எந்தமாதிரிக்கூடை போல் செய்யவேண்டுமோ அந்தக் கூடையைக் குப்புறவைத்து அதன் மீது படிமானமாகத் துணி சுற்றி, அதன்மீது இந்தக் கூழை வேண்டிய கனம் தடவுவார்கள். பிறகு கொஞ்சம் காய்ந்ததும் முதலில் எடுத்துக் கொண்ட கூடை அல்லது பாத்திரத்தை வெளியில் இழுத்துவிட அதே போல் ஒரு கடுதாசுக்கூடை கிடைக்கும். தற்காலத்திலும் இது பல குடும்பங்களில் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

3. நெட்டி பொம்மை, கொட்டாங்கச்சி பொம்மை, ஊதல், காற்றாடி, தம்பட்டம் இவைபோன்ற விளையாட்டு சாமான்களை வெகு சுலபமான முறையில் செய்துவிடுகிறார்கள். அதேபோல் சிற்சில விளையாட்டு சாமான்களைத் தாமே கண்டறிந்து செய்ய வீணாகப் போகும் பண்டங்களைக்கொண்டு ஒழிவு நேரத்தில் கவனம் செலுத்தலாம். ஜப்பான் முதலிய தேசங்களில் ஒரு ரப்பர் துண்டு, தகரத்துண்டு, செலுலாயிட் துண்டு வீணாக்காமல் அழகுள்ள வஸ்துக்களாகவும், விளையாட்டுக் கருவிகளாகவும் செய்து நம்மிடம் விற்று வருகிறதை நாமே தினசரிக் கண்ணுறக் காண்கிறோம் நாமும் நம் குழந்தைகளும் சிறுவர் கைவேலைத்திட்டத்தில் இவற்றைக் குறித்து சிந்திப்பதும் செய்வதும் நாளடைவில் தக்க பயனைத் தரும்.

வீணாகப்போகும் படங்கள், குச்சிகள், மரத்துண்டுகள், மெல்லிய பலகைகள், வெள்ளைத்துணிகள், பஞ்சு, கம்பி, பழப்பெட்டிகள் பழைய அட்டைகள், நூல் சுற்றிவரும் கட்டைகள், மெல்லிய ஆணிகள், இரும்புத் துண்டுகள், இவற்றைச் சேர்ப்பது ஒரு பாகம். இரண்டு வாரத்திற்கு ஒரு முறை உபாத்தியாயரும் குழந்தைகளும் கூடி யோஜித்து சில சாமான்கள் செய்வதைக் குறித்து யோசித்தல் இரண்டாவது அம்சம். மூன்றாவதாக இதை அறிந்த சில தொழிலாளர்களுடைய உதவியைக் கொண்டு சில வஸ்துக்களைச் செய்து முடித்தல் ஆகும். இவற்றை ஒழுங்காக நடத்துவதற்கேற்றபடி ஒழிவுநேரப் பொழுதுபோக்கு சங்கம் ஒன்று ஸ்தாபிப்பது பொருத்தமாயிருக்கும். பொருள் செலவு நிமித்தம் சங்கத்தின் அங்கத்தினர்கள் தலைக்கு மாதம் ஒன்றுக்குக் காலணாவீதம் வசூல் செய்து தேவையான முக்கிய சாமான்களையோ, கருவிகளையோ வாங்கிக்கொள்ளலாம்.

நூதன பாடதிட்டத்தில் சிறுவர் கைவேலைக்கு ஒரு முக்கிய ஸ்தானம்.

சர்க்காரால் வெளியிடப்பட்டுள்ள ஆரம்பப் பள்ளிக்கூட பாட திட்டத்தில் சிறுவர் கைவேலை ஒரு முக்கிய அம்சம் ஆகும். மேலே கூறிய கொள்கைப்படி ஊர், பண்டங்கள் வசதி, பாடதிட்டம் இவைகளுக்கு ஏற்றபடிக்கும் பொருத்தமான விஷயங்களை எடுத்துக்கொள்ளக் கூடும். பாடதிட்டத்தில் குறிப்பிடப்பட்ட கைவேலைகள்,

1. களிமண்வேலை
2. காகித வேலை
3. அட்டைவேலை
4. நார்வேலை
5. பாய் பின்னுதல்
6. கூடை, கயிறு வேலை
7. மெல்லிய பலகைவேலை
8. செலுலாயிட் சாமான்கள்
9. பெட்டி புஸ்தகம் கட்டுதல்
10. உருவங்கள் பெட்டி எழுதுதல்
11. தோல் வேலை
12. மணி சாமான்கள்
13. சிறு கைத்தறி செசவும் நூல் நூற்றலும
14. ஊசிநூல் வேலை
15. பிரம்பு சாமான்கள்
16. கோரைப்புல், கோரைப்பாய்
17. வலை பின்னுதல்
18. பொம்மைகள் செய்தல், முதலியன.

இவைகள் ஒவ்வொன்றுக்கும் டிரெயினிங் ஸ்கூல் நூதன பாட திட்டத்தில் போதுமான விபரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர்கள் அப்புஸ்தகத்தைப் படிப்பதும் அனுகூலமாயிருக்கும். உபாத்தியாயர்களே தாங்கள் இவைகளில் சிரத்தையெடுத்துப் பழகிக் கொண்டும், ஆங்காங்கு நடக்கும் புனர்பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டு இத்தொழில்களில் பயிற்சி பெற்றும் குழந்தைகள் சக்திப் பெருக்குக்கு ஏற்ற இக்கைவேலைகளில் கொஞ்சம் பாடுபடுவது கல்வியின் மேன்மைக்கும் தமக்கும் பெரிய கீர்த்தியைத்தரும்.

இவைகளைக் குறித்த சிற்சில நூல்களும் வெளியாகிவருகின்றன. சென்னை தியாகராயநகர் தாமோதர ரெட்டித்தெரு ஸ்ரீமதி சுவர்ணவல்லி அம்மாளால் "வினோதசில்பமு" என்ற புஸ்தகம் தெலுங்கில் வெளியாயிருக்கிறது. இது மிகவும் உபயோகமான புஸ்தகம். "பாலர் கல்வி" முந்தின சஞ்சிகைகளிலும் படங்கள் அமைக்கப்பட்ட சிறுவர் கைவேலைக்கான பல குறிப்புகள் வந்துள்ளன. சில மாத சஞ்சிகைகளிலும் சிற்சில சமயம் சிறுவர் கைவேலையைப்பற்றின குறிப்புகள் வெளியாகி வருகின்றன. இவற்றை ஆசிரியர்கள் கவனிப்பது நல்ல பலனைக் கொடுப்பதாகும்.

கல்விச்சாலை பல லக்ஷணங்களுடைய ஒரு கோயிலுக்குச் சமானம்.

ஒரு கிராமக் கல்விச்சாலை பிள்ளைகளின் பாடசாலை வாசகசாலை, நந்தவனம், கூடி விளையாடுமிடம் தொழிற்சாலை, நாடகசாலை, கூட்டுறவு பண்டகசாலை, பொருள் காட்சிசாலை, முதியோர்ஞான அபிவிருத்திசாலை, என்ற பல அம்சங்களை விளக்கிக்காட்டும் ஒரு பொதுஸ்தலம் ஆகும். இக்கைவேலைக்கு பிரத்தியேகமான இடம் கிடைக்குமானால் அனுகூலம் தான். இல்லையாயினும் வகுப்பு அறை, தாழ்வாரம், நிழலுள்ள திறந்த வெளிப்புறம் இவற்றையே சிறுவர் கைவேலை இடமாக மாற்றிக்கொள்ளலாம். செய்யும் இடம் கைவேலைக்குப்பின் சுத்தமாக அமைக்கப்பட வேண்டும். குழந்தைகள் தாமும் சுத்தமாக இருக்கப்பழகவேண்டும். செய்த பொருள்கள் செய்கருவிகள் இவைகளைச் சரியான இடங்களில் வைக்கப் பழகுதல், செய்தவைகளை கண்ணைக்கவரும் பொருட்காட்சி போல வைத்தல், இவைகள் கவனிக்கப்படவேண்டும். அப்பொழுது தான் அழகு, ஒழுங்கு, அறிவு, பக்தி, உண்மை, ஞானம் கலந்த திருக் கோவிலுக்குச் சமானம் ஆகும்.

தாய்மொழி கற்பித்தல்

M. Subramaniam, *L. M. C. High School, Shiyali.*

II தாய் மொழியின் தற்கால நிலைமையும் அதைக் கற்பித்தலின் நோக்கமும்

நமது தாய்மொழியான தமிழ்மொழியின் தற்காலப் போக்கும் விருத்தியும் எவ்வாறு இருக்கின்றன? தமிழர் இதை வளர்த்து ஆதரிக்கும் விஷயத்தில் எவ்விதமான ஊக்கம் கொண்டுள்ளார்கள்? அரசாங்கத்தார் இத்துறையில் எவ்வளவு சிரத்தை எடுத்துள்ளார்கள்? பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும், தாய்மொழியின் அந்தஸ்து என்ன? சிறப்பாக ஆசிரியரின் நோக்கமும், முயற்சியும் யாவை?

தாய்மொழி வளர்ச்சியும்—அரசாங்கமும் ஒரு குழந்தையை வளர்க்க அதன் தாயிக்குதான் நன்றாகத் தெரியும். ஒரு மொழியை வளர்க்க அம்மொழிபேசும் அரசனுக்கே தெரியும். பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டு மூவேந்தர்களும், தமிழை தங்கள் உயிர்போலப்போற்றி வந்தனர். தமிழ்ப்புலவர்களை அன்புடன் ஆதரித்து அவர்களுக்குத்தக்க மேன்மையையும் அளித்தனர். அக்காலத்தில் தாய்மொழியில் பேசுவோர்களுக்கும் எழுதுவோர்களுக்கும் குறையாத பெருமதிப்பும் உண்டு. ஆனால் இப்பொழுது அப்படி இல்லை. வேற்று அரசாங்கத்தால் தாய்மொழியின் பொலிவுகுன்றி இருக்கிறது. உண்மையான புலவர்களும் பலர் இப்பொழுது இல்லை. அரசாங்க ஆதரிப்பற்ற தாய்மொழியாகிய தமிழ் மொழி தற்போது தன் சிறப்பை இழந்து வாடின செடிபோல் துவண்டு மெலிந்து இருக்கின்றது.

தாய்மொழியும் தேசீயமும்

கொஞ்ச காலமாக நமது பாரத நாட்டில் தேசீய உணர்ச்சி எங்கும் பரவி இருப்பதால், அது தாய்மொழியையும் செழிக்கச்செய்ய விண்மாரிபோல் உதவுகிறது. ஒருவனுடைய தாய்மொழி வளர்ச்சிக்கு உயிர்நிலையாக இருப்பது அவன் வாழும் நாட்டுப்பற்றேயாகும். தாயின் அன்பும் நாட்டின் பற்றும், உள்ளத்தில் உயர்ந்த உணர்ச்சிகளை உண்டு பண்ணும். மக்களுக்குப் பிறவி உரிமையாகிய விடுதலை வெகு காலம் அழுத்தப்பட்டு இருந்தாலும், தக்க சமயம் வரும்போது அது அதிக வேகத்துடன் பலரும்கண்டு வியப்படையும்படி பல உருக்கொண்டு வெளிப்படும். இத்தகைய விடுதலை உணர்ச்சி வெளியாவதற்கு தாய்

மொழி இலக்கியமே முதலாம் கருவி. கவிஞனுடைய உயர்ந்த எண்ணங்களும் தாய்மொழி வாயிலாகவே தோன்றும்.

—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்திப்பிறக்குது மூச்சினிலே—என்றார் பாரதியாரும்.

நாட்டுப் பற்றால் சிலர் தம் நாட்டு இயக்கங்களில் தீவிர விருப்பங் கொண்டு அவற்றைக் கற்க ஆரம்பிப்பார்கள். சிலர் பண்டைக் காலத்து நூற்களின் சிறப்பைக் கற்க ஆரம்பிப்பார்கள். சிலர் பண்டைக் காலத்து நூற்களின் சிறப்பை பிறர் அறியுமாறு விரிவுடன் வெளியாக்கலாம். சிலர் தமிழில் புத்தம் புதிய நூல்கள் இல்லை என்று அவற்றை எழுதி முடிக்க முயற்சி செய்யலாம். சிலர் அரசாங்கத்தில் ஈடுபட்டு தாய் மொழி வளர்ச்சிக்குத் தகுந்த பிரயத்னங்களைச் செய்யக்கூடும். சிலர் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை மொழிபெயர்த்து, தாய்மொழியின் கௌரவத்தை அதிகரிக்கலாம். மின்சாரம், இயந்திரசக்தி, ஒலி பரப்பும் "ரேடியோ" முதலிய விஷயங்களைப்பற்றி சாதாரண நடையில் எல்லோருக்கும் பயன்படும்படி எழுதலாம். மற்றும் சிலர் உணர்ச்சி நிரம்பிய பாட்டுகளும் செய்யுளும் தாய்மொழியில் ஆக்கலாம். பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்களைக்கூறும் அரிய நூற்களை மற்றும் சிலர் இயற்றலாம், அரசியல் விஷயங்களைப் பிரசாரம் செய்ய தாய்மொழியை விரிவாகச் சிலர் உபயோகிக்கிறார்கள். பிறநாட்டுச் செய்திகள், வாணிபம், கலை, ஆராய்ச்சிக்கட்டுரைகள், பெரியோர் சொற்பொழிவுகள், புத்தகமதிப்புரை, புனைந்துரை, கற்பனைக்கதைகள், விளையாட்டுக் கதைகள், கேலிக் கூற்றுக்கள், நகைச்சுவைக்கதைகள், உற்சாகந்தரும் பொது விஷயங்கள், முதலியன அடங்கிய பத்திரிகைகளை வெளியிட்டுத் தாய்மொழி ஓங்கி வளர சிலர் ஊக்கம் கொள்ளலாம். சிலர் சிறந்த புராணக்கதைகளை அழகான நடையில் நாடகரூபமாக எழுதி, பேசும் ஒளிப்படத்தில் அமைக்கலாம். இப்படிப் பற்பலருடைய ஊக்கத்தாலும், உற்சாகத்தாலும், பெருமுயற்சியாலும் தாய்மொழியாகிய தமிழ்மொழி, தேசீய உணர்ச்சி பெற்று வளர்ச்சி அடைந்து கொண்டே வருகின்றது.

இந்த இலக்கியத்தின் தன்மை.

இப்படித் தேசீயக் கிளர்ச்சியினால் தோன்றும் தாய்மொழி இலக்கியத்தின் தன்மை எவ்வாறு இருக்கிறது? விடுதலை வேட்கையே தேசீயத்தின் அடிப்படை. நாட்டு விடுதலைக்கும் பாடுபடும் தேசத் தொண்டர்கள் தாய்மொழியின் விடுதலைக்கும் பெருக்கத்திற்கும் பாடு படுகின்றனர். இக்கால இலக்கியப் பெருக்கத்தின் தன்மை சற்று இலக்கண வரம்பு கடந்து, பல துறைகளிலும், கரைபுரண்டு செல்வதுபோல் இருக்கிறது. மேலும் இவ்விலக்கியத்தில் உணர்ச்சி நிறைந்ததாயும், எல்லாரும் அறிந்துகொள்ளும்படி எளிய நடையில் எழுதப்பட்டதாயும்

இருக்கிறது. எப்படி ஒருவர் பேசுகின்றார்களோ அப்படியே எழுத வேண்டும், என்னும் லக்ஷியம் பலரிடத்திலும் குடிகொண்டிருக்கிறது. எனவே விஷயத்திலும் நடையிலும், சொற்களின் அமைப்பிலும், பிறவற்றிலும், தற்போதுள்ள தாய்மொழியாகிய தமிழ், அதிக கம்பீரத்தை இழந்து, எளிதாக இருக்கிறது. தாய்மொழி புதுவிருத்திக்கு இதுவும் ஒரு அறிகுறியாகும். இத்தகைய நிலைமையை ஆசிரியர்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

கல்விச்சாலைகளில் தாய்மொழி

பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் தாய்மொழி கற்பித்தலைக் குறித்து தகுந்த திட்டங்கள் இப்போது அதிகரித்துக்கொண்டே வருகின்றன. எல்லா விஷயங்களையும் தாய்மொழி மூலமாகவே கற்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தார் பள்ளிக்கூட அதிகாரிகளுக்கு உத்தரவு கொடுத்திருக்கின்றனர். இதனால் பற்பல பாடசம்பந்தமான நூற்களும் தமிழ்மொழியில் எழுதப்பட்டு வருகின்றன. கணிதம், சயன்ஸ், பொருள் நூல், பூதநூல், சரித்திரம், வேதிநூல், உடல்நூல், தரைநூல், அரசியல் சட்டநூல் இவைகள் விரைவாக எழுதப்பெற்று வெளிவருகின்றன. இதனால் தாய்மொழியின் சீரும் சிறப்பும், பெருகக்கூடும்.

சில ஆசிரியர்களும் தாய்மொழியும்.

தமிழாசிரியர்களின் கூட்டுறவு இல்லாமல் தாய்மொழி வளர்ச்சியடைய முடியாதாகையால், அவர்கள் இத்துறையில் புதிய ஊக்கத்தோடு புதிய முறைகளைக்கைக்கொள்ள வேண்டும். புதுமையைக்கண்டு சந்தேகித்து வெறுப்பு அடையாமல், இதில் நலம் உண்டு என்று கருதி, கலந்துகொள்ளவேண்டும். இப்படி இல்லாமல் சில தமிழாசிரியர் இலக்கணத்தையே அடிப்படையாகக்கொண்டு இனிமையாகிய தமிழை வேறுமொழியைப்போல் தோன்றும்படி செய்கின்றார்கள். இலக்கணத்திற்கே இலக்கியத்தையும் பலியிடுகின்றார்கள். பண்டைக்காலத்து தமிழ் இலக்கணமெல்லாம் செய்யுளைத்தழுவி இருக்கின்றது. வசன நடைக்கு வேண்டிய இலக்கணபாகம் மிகவும் சொற்பமேயாகும். எழுத்துக்களின் எண், பெயர், முறை, பிறப்புமுதல். பதவியல், புணரியல், சொல் அதிகாரம், முதலியன இறுதியாக கற்கவேண்டியது மிகவும் அவசியமாயினும், வேண்டிய அளவே கற்பிக்கவேண்டும். தவிர, தமிழ் வாசனையே கொஞ்சமேனும் அறியாத மற்றும் சிலர் தாய்மொழியை தங்கள் இஷ்டம்போல் கற்பிக்க முயல்கின்றார்கள். இவர்கள் பூகோளம், சரித்திரம், கணிதம் முதலிய இதர பாடங்களைக் கற்பிக்கும்போது, வகுப்புக்களில் மிகவும் கொச்சையான பாஷையில் பேசுகின்றார்கள். இதைக்கேட்கும் மாணாக்கரும் கேட்டவாறே எழுதவும் பேசவும் ஆரம்பிக்கின்றார்கள். இத்தகைய விஷயங்கள் எல்லாம் தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியருக்கு கஷ்டங்களை உண்டாக்குகின்றன.

பிறநிலைமைகளும் தாய்மொழியும்

தாய்மொழிகள் தற்போது ஓங்கி வளர்வதற்குத்தகுந்த பல அறிகுறிகள் இருப்பினும் வேறுசில காரணங்களால் அதன் தூய்மையும், பெருமையும், கெடுகின்றன. நம் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருப்பவர் பெரும்பாலோர் ஆங்கிலம் கற்றவர் ஆவர். இவர்களுக்குப் போதுமான தமிழ்ப்புலமை இல்லை. உத்தியோகத்தில் அதிகமாக ஈடுபட்டு ஆங்கிலச் சொற்களிலேயே மூழ்கிக் கிடக்கின்றனர். இவர் தம் மக்களோடு உரையாடும்போது ஏராளமாக ஆங்கிலச் சொற்களையே உபயோகிக்கின்றனர். தாய்மொழியில் பேசுவது குறைஎன்றும், ஆங்கிலத்தில் பேசுவது உயர்வு என்றும் கருதுகின்ற இப்பட்டண வாசிகள், தங்கள் பிள்ளைகளையும், தாய்மொழி பேசவிடாமல், ஆங்கிலத்தையே சிறப்புச் செய்கின்றனர். இப்படிப்பட்ட பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வரும்போது அவர்கள், தங்கள் வீட்டு நிலைமைகளையும் சுற்றுப்புர வாசனைகளையும் அகற்றி தாய்மொழியில் சுத்தமாகப் பேசவும் எழுதவும் முடியுமா? இதற்கு மாறாக கிராமங்களில் வசிக்கும், கல்வி வாசனை இல்லாத கிராம வாசிகள் தமிழோ மிகவும் கொச்சையாக இருக்கிறது. நிற்க, அனேக தமிழ் வெளியீடுகள், தோன்றி இருக்கின்றன. இவற்றில் சில உயர்ந்தனவாகவும், சில தாழ்ந்த தன்மையுள்ளனவாகவும் இருக்கின்றன. சாதாரணமாக மாணவர்கள் தாழ்ந்தனவற்றையே விரும்புகின்றார்கள். இவற்றைப்படிக்கும் மாணவர்களுடைய நடையும கேவலமாக இருப்பதோடு பிழைநிறைந்ததாகவும் இருக்கிறது. இதைத்திருத்தி அமைப்பது ஆசிரியருக்குச் சற்றுகஷ்டமாகவே முதன்முதல் தோன்றும்.

தாய்மொழியும் பிரசாரமும்

தற்போது பிரசாரமில்லாமல் எவ்விஷயமும் சரியான பலன் அளிக்கிறதில்லை. பிரசாரம்செய்து தாய்பாஷையின் உயர்வை அதிகப்படுத்தவேண்டும். தமிழ்வித்துவான்களும், தாங்கள் தாழ்ந்தவரென்று கருதக்கூடாது. இதற்குப் பல ஆசிரியர்களும் பிரசாரம் செய்து, தமிழ்ப் பண்டிதர்களுடைய தாழ்ந்த மனப்பான்மை உணர்ச்சியை (Inferiority Complex) நீக்கவேண்டும். பெற்றோர்கள் வீடுதோறும்சென்று தாய்மொழி மூலமாகப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் விஷயங்கள் எவ்வாறு அவர்கள் பிள்ளைகளுக்கு நன்மை தருகின்றன வென்பதை தெளிவாகச் சொல்லவேண்டும். பாடதிட்டங்களில் தாய்மொழியே சிறந்ததென்று உணர்த்த, அடிக்கடி துண்டு பிரசுரங்களையும் வெளியாக்கவேண்டும்.

தாய்மொழி கற்பித்தலில் ஆசிரியரின் நோக்கம்

மாணவர்களுடைய அறிவும், மொழிவளர்ச்சியும், திட்டமாக வேண்டுமானால், ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒருநோக்கம் இருக்கவேண்டும்; (1) சொல்லவேண்டியதையும், எழுதவேண்டியதையும் எளியநடை

யில் இனிமையுடன் தெளிவாகச் சொல்லக் கற்பிக்கவேண்டும். இதற்குப் போதுமான எண்ணங்களும் கருத்துக்களும் (Thoughts and Ideas) படிப்படியாக பிள்ளைகளின் மனத்தில் பல வழிகளாலும் அமையும்படி செய்யவேண்டும். இவற்றிற்குத் தக்கசொற்களை கருத்தோடு புணர்த்திடப் பழக்கவேண்டும். ஒழுங்காகச் சொல்வதற்குமுன் தெளிவாகச் சொல்லத் தூண்டுவது நலமாகும். காண்பதையும் கேட்பதையும் உணர்வதையும், அனுபவிப்பதையும், எளிய நடையில் எடுத்துச்சொல்லக் கற்பிப்பதே முதல்நோக்கமாகும். (2) பள்ளிக்கூடத்தில் கற்ற தாய்மொழிப் பயிற்சி, ஒரு மாணக்கனுக்கு தனது பிற்காலங்களில் சிறந்த காவியங்களையும் நூற்களையும் படித்து ஆனந்தப்படுவதற்கும், தினசரி சமாசாரங்களைப் படித்துத் தெரிந்துகொள்வதற்கும் உதவவேண்டும். எனவே தாய்மொழி பயிற்சி ஒருவனுக்கு படிக்கும் பழக்கத்தையும் உண்டுபண்ணுகிறது. (3) ஒருவன்தன் கருத்தை எளிதில் பிறருக்கு வெளியிடவும், பிறர்சொல்வதை வாங்கி எழுதவும், தாய்மொழியே தக்க கருவியாகும். ஆசிரியர்கள் முதலிலிருந்து தம் மாணக்கர்களைப் பேசவும், பேசுவதைக்கவனத்துடன் கேட்கவும் செய்ய வேண்டும். (4) கவிரவீந்திரநாத்தகோர், பாரதியார் இவர்கள் தாய்மொழிச்சிறப்பால் உலகமெல்லாம் போற்றும் கவிஞர்களானர்களேயொழிய, பிற பாஷையினுல் ஆகவில்லை. ஆகையால் ஒருவனுடைய கற்பனசக்தியையும், உற்பத்திசக்தியையும், உண்டாக்கச் சாதனமாயிருப்பது தாய்மொழியே. இந்த நோக்கத்தையும் ஆசிரியர் ஒருபோதும் மறக்கலாகாது. (5) உண்மையானகல்வி ஒருவனுக்குத் தக்கசமயத்தில் யோசித்து அறியும் சக்தியைத்தரவேண்டும். இதற்கு விஷயதெளிவே காரணமாகும். விஷயம் நன்றாக மனத்தில் அமையவேண்டுமானல், தாய்மொழியின் மூலமாக அதைத்தெரிந்து கொள்வதே நலம். ஆகையால் தாய்மொழிப் பயிற்சியால், தர்கக சாஸ்திரமுறைப்படி ஒன்றை அனுமானிக்கவும் யோசிக்கவும், துணைபுரிகிறது. இதனுல் நுட்பமான புத்தியும் உண்டாகின்றது. (6) கடைசியில் ஒரு மாணக்கனது பௌருஷத்தை (Personality) உண்டாக்குவது தாய்பாஷையே யாதலால் அதைச்சரிவர கற்பிக்கவேண்டும். கம்பன் முதலியோர்களுடைய புகழ் இன்றைக்கும் அழியாமல் இருப்பதற்குக் காரணம் தாய்மொழியே ஆகும். இத்தகைய நோக்கங்களை ஆசிரியர்கள் தெளிவாக தங்கள் மனத்தில் வைக்கவேண்டும்.

(தொடரும்).

கல்வியும் இளஞ்சாரணீயமும்

—

K. K. Lakshminarayanan, *Cubmaster D.S.S.N. School, Walajabad.*
Representative of Chinglepat District to the Provincial Council, Madras Presidency, (Hindustan Scout)

(13-ம் பக்கத் தொடர்ச்சி).

சிங்கக்குட்டி ஆசிரியர் :—அணிக்கு ஒரு தலைவன் இருப்பதுபோல மொத்த சிங்கக்குட்டி மந்தைகளுக்கும் சேர்ந்து தலைவராக இருப்பவர் தான் சிங்கக்குட்டிகளின் தலைவர் அல்லது சிங்கக்குட்டி ஆசிரியர் என்பது. நான்கு அணிகளுக்குமேல் அதாவது சட்டப்படி அணிக்கு ஆறு பேர் வீதம் நான்கு அணிகளுக்கும் சேர்ந்து 24 சிங்கக்குட்டிகளுக்கு மேல் சிறுவர்கள் ஆவலோடு சேரும்போது சிங்கக்குட்டி ஆசிரியர் தனக்கு உதவியாக ஒருவரை நியமித்துக் கொள்ளலாம். அவர்தான் உதவி சிங்கக்குட்டி ஆசிரியர்.

உதவி சிங்கக்குட்டி ஆசிரியர் கவனிக்கவேண்டியவை :—

ஆரம்பத்திலேயே சேர்ந்திருக்கும் சிங்கக்குட்டிகளை தன் கையின் கீழ் இருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டு அதிகாரம் செலுத்தினால், இளம் பிராயமுள்ள சிறுவர்கள் தனக்குள் அடங்கியுள்ள கருத்துக்களை வெளியிடமுடியாமல் எப்படி வகுப்பறையில் பயத்தின் காரணத்தினாலேயே தெரிந்ததையும், தெரியாது என்று கேள்விகளுக்கு முழிக்கிறார்களோ அதேமாதிரிதான் இவ்விடத்திலும் பயப்படுவார்கள். ஆகையால் அவர்களுக்குப் போதிய சுதந்திரம் கொடுத்து அவர்கள் கருத்தையும், பழக்கவழக்கங்களையும், அவர்கள் இஷ்டப்படி நல்ல வழியில் வளரச் செய்யவேண்டும். அவர்கள் சில தப்பிதங்கள் செய்வது சகஜம்தான். அப்பொழுது நாம் அவ்வப்போது அடிக்காமல், பயமுறுத்தாமல் திருத்தப் பிரயத்தனப்படுவதுதான் நலம். பிள்ளைகளுக்கு சுதந்திரம் கொடுப்பதில் வெகு ஜாக்கிரதையாக "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்" என்பதுபோல அதிகமாக கொடுத்துவிட்டால் பின்னால் அவர்களை அடக்குவதே கடினமாகிவிடும். இவைகளையெல்லாம் இடத்துக்கும், காலத்துக்கும், பிள்ளைகளுக்கும், தக்கமாதிரி அனுபவத்தில் கூடியமட்டும் முடிந்தவரை பார்த்துக்கொள்ளவேண்டும். இது அனுபவத்தில் தானாகவே தெரிந்துகொள்ளவேண்டியது.

சிங்கக்குட்டி ஆசிரியருக்கு வேண்டிய குணங்கள் :—

(1) சாரணீயத்தில் குன்றாத நம்பிக்கை
(2) கோபத்தையடக்கல்
(3) தன்னடக்கம்
(4) சுயநலம் கருதாமலிருத்தல்
(5) பலன் எதிர்பாராமல் உழைக்கும் குணம்
(6) பக்ஷபாதமில்லாமல் இருத்தல்
(7) குறித்த காலத்தில் எதையும் செய்வது
(8) சிக்கன வாழ்க்கை
(9) குழந்தைகளின் சுபாவத்தை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சித் தன்மை

(10) குழந்தைகளை எளிய நடையில் வசீகரிக்கும் குணம் : மேல் சொன்ன 10 குணங்களும் இருந்தால் வெற்றியுள்ள சிங்கக்குட்டி யாசிரியராயிருப்பார்.

அணியும், தலைவன், உபதலைவனும் :—ஆறுபேர் ஒரு அணிவீதம் பிரிக்கவேண்டும் என்று முன்னமே சொல்லியிருக்கிறது. அதைப்போல பிரித்த பிறகு அந்த ஆறு பேர்களில் ஒரு தலைவனும், ஒரு உபதலைவனும், நியமிக்கவேண்டும். ஆனால் அப்படிச் செய்யும்போது பிள்ளைகளையும் கலந்து வயதில் முதிர்ந்தவனாகவும், நல்ல நடத்தையும், பழக்கவழக்கங்களும், சகோதர வாஞ்சையும், பரோபகாரமும், உண்மை பேசுபவனாகவும், சுறுசுறுப்பும், விடாமுயற்சியும், உடையவனைப் பொறுக்கி நியமித்தால் இவனே மற்ற சிங்கக்குட்டிகளுக்கு வழிகாட்டியாயிருந்து மற்ற சிறார்களையும் திருத்திவிடுவான்.

தலைவன், உபதலைவன், வைக்கும் நோக்கம் :—எப்பொழுதும் எல்லாப் பிள்ளைகளையும், அவர்களுக்குள்ளேயே நம் உதவியில்லாமல் நடத்தும் பழக்கத்தை உண்டாக்கவேண்டும். உதாரணமாக ஒரு மாணவர் சங்கக்கூட்டத்துக்கு ஒரு ஆசிரியர் தலைமை தங்குவதைவிட பிள்ளைகளுள் ஒருவனைத் தலைவராக இருக்கச்சொல்லி எப்படி நடத்துகிறார்கள் என்று கவனித்து வருவதுதான் பிற்காலத்தில் சிறார்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதைப்போல அணிகளுக்கும், தலைவன் நியமித்தால், அந்த அணியிலுள்ளவர்கள் தலைவனுக்குக் கீழ்படியும் குணம் முதலியன கற்றுக்கொள்ளுகிறார்கள். தவிர சிங்கக்குட்டி ஆசிரியருக்கும் சௌகரியமாயிருக்கும். எப்படியென்றால் அணியின் தலைவன் அந்தந்த அணியிலுள்ள சிங்கக்குட்டிகளைப் பற்றி நன்றாகக் கவனிக்கவும், அவர்களைப்பற்றிய எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டு சிங்கக்

குட்டி ஆசிரியர் கேட்டபோது அவர்களைப்பற்றிய தகவல் கொடுப்பான். விளையாட்டு முதலியன ஆடும்போது தலைவன் இருந்தால் அவனே கவனிப்பான்.

குருளையர் இயக்கப்பிரிவுகளைக் கூட்டும் குறிப்பு —

சிங்கக்குட்டி ஆசிரியர்
|
* உதவி சிங்கக்குட்டி ஆசிரியர்
|
சிங்கக்குட்டிகளின் மந்தை
|
அணிகள்

I அணி	II அணி	III அணி	IV அணி
தலைவன்	தலைவன்	தலைவன்	தலைவன்
உபதலைவன்	உபதலைவன்	உபதலைவன்	உபதலைவன்
சிங்கக்குட்டி	சிங்கக்குட்டி	சிங்கக்குட்டி	சிங்கக்குட்டி
Do	Do	Do	Do
Do	Do	Do	Do
Do	Do	Do	Do

குறிப்பு—:சிங்கக்குட்டிகளின் வகுப்பு நடக்கும்போது எல்லாப் பெயர்களையும், பாட்டுக்களையும், சிம்மநாதங்களையும், சமாசாரங்களையும், கூடியவரை தமிழிலேயே நடத்தப் பிரயத்தனப்படவும். என் பள்ளியில் முதலில் நான் அவர்களை **Cub** என்றும் **Cub Pack** என்றும் சொன்னபோது அவர்கள் என் வார்த்தைகளை மந்திரக்காரன் மந்திரம்போல் நினைத்தார்களேயொழிய ஆவலோடு கவனிக்கவில்லை. தவிர அணியிலுள்ள ஒரு வேடிக்கையான பையன் அந்த "**Cub**" "கப்பாவது காபியாவது என்ன ஸார் அது" என்று கேட்டான். அது முதல் நான் சந்தோஷமாகத் தமிழிலேயே சொன்னேன். உன்பேர் சிங்கக்குட்டி என்றேன். சொன்ன மாத்திரத்திலேயே தாங்கள் சிங்கக்குட்டிக் கொப்பானவர்கள் என்று சந்தோஷத்தோடும், தானே கௌரவப்படுத்திக்கொண்டும், கம்பீரமாகவும், உற்சாகமாகவும், வீரமாகவும், இருக்க வேண்டும் என்று பிரயத்தனப்படுவதை அனுபவத்தில் கண்டறியலாம்.

வகுப்புகள் :—(குருளையர் வகுப்பு) குருளையர் வகுப்புகள் வாரத்திக்கு ஒரு முறையாவது திறந்த வெளியில் அதாவது இயற்கை அன்னை

* உதவிசிங்கக்குட்டி ஆசிரியர் இருந்தால் அவருக்காக 5 வது, 6 வது, போல் 8 அணிகள் மொத்தம் சட்டப்படி வைத்துக்கொள்ளலாம்.

யின் தோற்றம் உள்ள இடத்தில் குறித்த நாளில், குறித்த நேரத்தில் வைத்து நடத்தவேண்டும். குறித்த நேரத்தில் நீ நடத்தும் காரியம் ஆரம்பிக்கவேண்டும் என்று பிரசங்கம் செய்வதைவிட அனுபவத்திலேயே நாம் நடத்தினுல் நலம். மொத்தத்தில் மாதத்துக்கு நான்கு வகுப்புகளும், ஒரு உல்லாஸப் பிரயாணமும், இருக்கவேண்டும். அதில் மாதத்துக்கு ஒரு தரம் சாரணீய சம்பந்தமுள்ளவர்களே வரவழைத்து ஒரு வகுப்புவைத்துக்கொண்டால் பிள்ளைகளுக்கும் சந்தோஷமாக இருக்கும். அதிலும் அவர்கள் எதிரில் நம் சிறுர்களுக்குப் போட்டிப் பந்தயம் முதலியன வைத்து ஜெயித்தவர்களுக்குச் சின்னம் முதலியன கொடுத்தால் அவர்கள் மகிழ்ச்சிக்குக் கரையே யிருக்காது. உற்சாகம் "ஊற்று நீர் போல்" பெருகும் என்பது தெரிந்தவிஷயம். நாம் சிறுவர்களிடம் என்னென்ன நல்ல பழக்கங்களே எதிர்பார்க்கிறேமோ அவை மொத்தம் நம்மிடமும் இருக்கவேண்டும். ஏனென்றல் "தாயைப்போல் கன்று" "நூலைப்போல் சேலை" என்பதுபோல் பிள்ளைகள் நம்மிடமிருந்து தான் கற்றுக்கொள்கிறுர்கள். ஆகையால் நாம் நம் கையில் விடப்பட்டிருக்கும், சிறுர்கள் நாளைய பாரதநாட்டு மகான்களாவும், வீரர்களாகவும், தேசபக்தர்களாகவும், தொண்டு புரிவோர்களாகவும், திகழ்வார்கள் என்ற அந்த உயரிய நோக்கத்தோடு அவர்களைப் பழக்கினுல் அதுவே தேசத்தாய்க்குப் புரியும் பெரிய தொண்டுக்குச் சமம்.

(தொடரும்)

படிப்பின்சில முக்கியமான மூலாம்சங்கள்

T. N. Krishnamurti, M. A., L. T.,
Dy. Inspector of Schools, Madras South.

(172-ம் பக்கத் தொடர்ச்சி.)

சென்ற மாதம் பள்ளிக்கூட சமூக வாழ்க்கையைப்பற்றிய சில கட்டுப்பாடுகளைப்பற்றிக் கூறினேம். இப்போது அக் கட்டுப்பாடுகளுக் கடங்கிய பள்ளிக்கூடங்களில் எம்மாதிரியான 'காரிய நியமிப்பு' **(Organisation)** இருத்தல் நலம் என்று கவனிப்போம். பிள்ளைகளும் பெண்களும் சில இன்றியமையாத கட்டுப்பாடுகளுக் கடங்கி வேலை செய்ய வேண்டுமென்ருல், அவர்கள் மேற்கொள்ளும் வேலை அல்லது முயற்சி **(Activity)**, அவர்கள் மனேபாவத்திற்கும் சரீர அமைப்புக் கும், ஏற்றதாக இருத்தல் அவசியம் என்பது வெளிப்படையாகும். அவர்களுக்குப் பற்றுதல் **(Interest)** ஏற்படக்கூடாத வேலையைக் கொடுத்துவிட்டுப் பிறகு ஒழுங்கு **(Orderliness)** இல்லை யென்றும், நல்ல நடத்தை இல்லையென்றும், பிள்ளைகள் முழுமனதுடன் வேலை செய்ய வில்லை யென்றும், நாம் குறைகூறுவது நியாயமாகாதல்லவா? ஆயினும் எத்தனை பள்ளிக்கூடங்களில் நாம் இக்குறையைச் சாதாரணமாகக் காண் கிருேம். பிள்ளைகளுக்குப் பற்றற்று, அவர்கள் மனேபாவத்திற்கு இசையாத வேலையே நமது பள்ளிக்கூடங்களில் சாதாரணமாக உள்ள வேலையல்லவா? ஷேக்ஸ்பியர் என்ற மேல்நாட்டுக்கவி பாலியத்தைப் பற்றி எழுதும்போது, "புஸ்தகப்பையை எடுத்துக்கொண்டு, மனமில்லா மல், பள்ளிக்கூடத்துக்கு ஊர்ந்து செல்லும் பால்யம்" என்கிருர். மேல்நாட்டிலும், நமது நாட்டிலும், சிறுவர்களுக்கு இத்தகைய சுபாவம் இருப்பதன் காரணம் என்ன? உபாத்தியாயர்களாகிய நாம் கவனிக்க வேண்டியது அவசியமல்லவா?

பள்ளிக்கூட "காரிய நியமிப்புக்கு" அடிப்படையாக இருப்பது பாலர்களின் மனேபாவம். ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள பிள்ளை களின் மனேபாவம் என்ன? அவர்களுடைய தேகத்திற்கு வேண்டிய பயிற்சிகள் என்ன? இவற்றை நாம் தெரிந்துகொண்டால், 'காரிய நிய மிப்பு' வளம் பெற்றதாக இருக்கும்.

6 வயதிலிருந்து - 12 வயது வரையிலுள்ள பிள்ளைகளின் தன்மை என்ன? இவ்வயது காலத்திலுள்ள **(Age-Span)** சிறுவர்கள் தங்களுடைய தேகத்திற்கு வேலை கொடுப்பதிலும், ஓடியாடுவதிலும் தேகத்திற்குப் பயிற்சி கொடுப்பதிலும், விளையாட்டிலும், ஈடுபட்ட

வர்கள். இரண்டாவதாக, தங்களுடைய அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்வதிலும், இதரர்களுடன் போட்டி போடுவதிலும் இவர்களுக்குப் பிரியம் அதிகம். மூன்றாவதாக, நாளடைவில் பிறருடைய அபிப்பிராயங்களுக்கு மதிப்பு கொடுக்கும் சுபாவம் ஏற்படுகிறது. நான்காவதாக, இவ் வயது காலத்தில் பிள்ளைகள் வஸ்துக்களைச் சேகரிப்பதில் அதிக பிரியப்படுகிறார்கள். ஐந்தாவதாக, சுற்றுப்புறத்திலுள்ள சம்பவங்கள், காட்சிகள் இவைகளைபற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளப் பிரியப் படுகிறார்கள். ஆறாவதாக, நாடக முறையில், தங்களது அபிப்பிராயங்களையும், சுற்றிலும் பார்க்கும் சமபவங்களையும் எடுத்துச் சொல்ல இவர்களுக்குப் பிரியம் அதிகம். இத்தகைய சுபாவமுள்ள வயதினர்களுக்கு ஏற்றவாறு பள்ளிக்கூடக் காரிய நியமிப்பும் இருப்பதே கிரமமாகும். வேறு எவ்விதமான காரிய நியமிப்பும் பசித்த வாய்க்குச் சோறு கொடுப்பதில்லாமல், கல்லைக் கொடுப்பதற்கே உவமையாகும். அக்காரிய நியமிப்பின் மூலமாகப் பள்ளிக்கூட சமூக வாழ்க்கை, ஒழுங்குள்ளதாகவும், நன்னடத்தை பொருந்தியதாகவும், சுறுசுறுப்புவேலை அமைந்ததாகவும் இராது.

ஆகையால், பிள்ளைகளுக்காக ஏற்படும் பாடதிட்டமானது, பிள்ளைகளின் தேக அமைப்பையும், மனோபாவத்தையும் தழுவியிருத்தலவசியம். இப்பாடதிட்டமானது பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் விஷயங்களை **(Facts)** த் தழுவியிராமல் பிள்ளைகள் செய்யவேண்டிய வேலைகளையும் **(Activities)**, அவர்களுடைய அநுபவங்களையும் **(Experiences)** ஒட்டியதாக இருக்கவேண்டும். கணக்கு, பூகோளம், பாஷை, முதலிய பாடங்களை நாம் எடுத்துக்கொண்டோமானால் சிறுவர்களுக்கு இப் பாடங்களைப்பற்றிய விஷயங்களை, விஷயங்களாகப் போதிக்காமல், இப் பாடங்களிலிருந்து ஏற்படக்கூடிய வேலைகளாகவும், அனுபவங்களாகவும் கற்பிப்பதே நலம். பாடதிட்டம் தயார் செய்யும்போது பிள்ளைகளுக்குரிய வேலைகளையும் **(activities)**, அனுபவங்களையும் **(experiences)** தேர்ந்தெடுக்கவேண்டும். இவை, பிள்ளைகளே செய்யக்கூடியவையாகவாயினும் அல்லது புஸ்தகங்களிலிருந்து படித்துத் தெரிந்து கொள்ளக்கூடியவையாகவாயினும் இருப்பதவசியம். குழந்தைகளைச் சுற்றுப் புறத்தோடு சம்பந்தப்படுத்தவேண்டும். வீடு, குடும்பம், தேசம், ஜன சமூகம் முதலியவற்றையும் சிறுவர்களையும் சம்பந்தப்படுத்த வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளின் பாடதிட்டத்தைப்பற்றிக் கூறும்போது கமிட்டியார் பின்வருமாறு கூறுகிறார்கள் :—ஆரம்பப் பள்ளிக்கூடத்துப் பாடதிட்டமானதுபிள்ளைகளின் அனுபவத்தையும், அவர்கள் செய்யக் கூடிய வேலைகளையும் தழுவியதாக இருக்கவேண்டுமேயல்லாது விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும், அவைகளைச் சேகரம் செய்து கொள்ளும் நோக்கத்தைத் தழுவியதாகவும் இருக்கக்கூடாது. **(Report of the Consultative Committee on the Primary School')**. இதை நாம்

ஞாபகம் வைத்துக்கொள்வது அவசியம். இத்துடன்கூட ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பாடதிட்டம் அமைப்பவர்கள் மற்றொரு முக்கிய மான விஷயத்தை மறத்தல் கூடாது. அதாவது கற்றுக்கொள்ளும் விஷயத்தில் சில துறைகளில் ஏற்படவேண்டிய அறிவானது, தினப் பழக்கத்தினுலுமே சாதகத்தினுலுமே (Drill) உண்டாகக்கூடும்' கணக்கில் சில முக்கிய விதிகள் இத்தகையவை.

இதுவரையிலும் கூறிய மூலதத்துவங்களை நாம் எப்படி பாட திட்ட அமைப்புக்கு உபயோகப்படுத்தலாம் என்று இனிக் கவனிப்போம். இந்த விஷயத்தில் நமக்கு அதிக 'பிரமையைக்' கொடுக்கக் கூடியது கணக்கு. அதை முதலில் எடுத்துக்கொள்வோம். பிள்ளைகள் அனு பவத்தையும், அவர்கள் விளையாட்டுகளையும், அவர்கள் மனேபாவத் தையும் ஒட்டி எப்படி கணக்குப்பாட திட்டம் அமைப்பது என்பது நமது பிரச்னையல்லவா? பிள்ளைகள் விளையாட்டுகளில், "உன்னைவிட என்னிடம் அதிகம் இருக்கிறது, உன்னைவிட நான் உயரம், உன்னைவிட நான் வேகமாக ஓடுவேன், உன்னைவிட நான் பலவான், நாம் கடை விளையாட்டு விளையாடலாம்", என்னும் பேச்சே அதிகமாக இருப்பதை நாம் கவனித்திருக்கலாம். இவைகளை ஒட்டிய பாடதிட்டம் அமைப்பது கஷ்டம் அல்ல. முதலில் நாம் கொடுக்கும் கணக்குகள், நிறுத்தல், அளத்தல், எண்ணுதல் முதலிய காரியங்களை பிள்ளைகளே செய்து, பிறகு சிறிய கணக்குகளை போட நாம் திட்டப் படுத்தினல், பிறகு ஆலோசனைக்கிடங்கொடாமல், சாதகத்தினுலேயே ஏற்படக்கூடிய சில திறமைகளில் (Mechanical Skills) நாம் பழக்கலாம். பிள்ளைகளுக்கும் அப்பாடத்தில் ஓர் பற்று உண்டாகும். கணக்குப் பாடத்தை புஸ்தகத் தின் மூலமாகவே கற்பிப்பதனுல் அது பெரிதும் பலனற்றதாகப்போய் விடுகிறது.

(2) **சித்திரம், கைவேலை (Art and Crafts)**:—இந்தப் பாடங் களிலும் நமது பாடதிட்டத்துக்கும், பிள்ளைகளின் மனேபாவத்துக்கும் சம்பந்தம் இல்லாமலே இருந்து வருகிறது. பிள்ளைகள் தங்களைச் சுற்றிலு முள்ளவைகளைப் போல தாங்களே செய்யப் பிரியப்படுகிறார்கள். அவர்கள் விளையாடும்போது, வீடு, வாசல், அவர்கள் பார்க்கும் இதர சாமான்கள் இவைகளைப்போலத் தாங்களே செய்யவும் தாங்கள் செய்யும் சாமான்களில் புதிய அம்சங்களை அமைக்கவும் பிரியப்படுகிறார்கள். நமது 'கைவேலைப் பாடங்கள் பிள்ளைகளின் அவாவை ஒட்டியிருப்பதவசியம். பூகோளம், தேச சரித்திரம், தோட்டவேலை முதலிய பாடங்கள் இந்த அவாவைப் பூர்த்தி செய்துகொள்ளவும், அதன் அடிப்படையாக நன்றாக எழுதக்கூடிய ஓர் சந்தியையும் கொடுப்பதற்கும் அதிக சந்தர்ப்பங்கள் அளிக்கின்றன.

(3) **சுற்றுப்புறத்தின் அற்புதம்**:—சாஸ்திரப் படிப்பானது இயற் கையின் ஆச்சரியத்தையும், அற்புதத்தையும் எடுத்துக்காட்டக் கூடிய

தாக இருக்க வேண்டும். நீராவிவரும் கெட்டிலையும் மேகத்தையும், மின்னலையும் மின்சாரத்தையும், தினசரிகால சுபாவமாறுபாடுகளையும், ஆகாயத்தில் ஏற்படக்கூடிய மாறுபாடுகளையும், குளம், குட்டை, தோட்டம், வயல் முதலிய இடங்களிலுள்ள அபரிமிதமான ஜீவன்களையும் பிள்ளைகள் கவனத்துக்குக் கொண்டு வருவதுடன் கூட, அவைகளின் மூலதத்துவங்களையும் பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டுவதே இந்தப் பாடக்காரிய நியமிப்பின் முக்கிய நோக்கம். பிள்ளைகளை இலைகள், விதைகள், கடற்கரையிலுள்ள கிளிஞ்சல், சோழி முதலியவற்றைச் சேகரிக்கச் செய்வதும், அவைகளைப் பார்த்து, அவைகளைப் பற்றிய சிறிய குறிப்புகள் எழுதச்சொல்வதும், இப்பாடத்தின் நேர்மையான அமைப்பாகும்.

(4) **சரித்திரம், பூகோளம்** :—இப்பாடங்களின் முக்கிய நோக்கம் அவைகளிலுள்ள ஆச்சரியங்களை எடுத்துக் காட்டுவதேயாம். மஹா அலெக்ஸாந்தர் படையெடுப்பு, புத்தரின் சரித்திரம், இவைகளில், படையெடுப்பைப்பற்றிய விஷயங்களை எடுத்துச் சொல்வதுடன் நில்லாமல், அலெக்ஸாந்தருக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும், அவைகளை அவர் எவ்வாறு வென்றார் என்பதையும், பற்றி விஸ்தரிப்பது நலம். புத்தரின் சரித்திரத்திலும், பிள்ளைகளின் 'ஆச்சரியத்தை' கவரக்கூடிய அம்சங்களை விஸ்தரிப்பது பிரயோசனப்படும். பூகோள பாடங்களிலும் இவ்வுணர்ச்சியை ஊட்டுவதே முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும். படங்கள் வரைவது, படங்கள் சேகரிப்பது, முக்கிய இடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செய்வது, சரித்திர சம்பந்தமான கதைகளை நாடகரூபமாக ஆடுவது இவைகள் பிள்ளைக்குப் பெரிதும் மனக்கிளர்ச்சியை உண்டாக்கக் கூடியவை. நமது காரிய நியமிப்பில் இவை இருப்பது அவசியம்.

(5) **பாஷை** :—பாஷையில் தெளிவான ஞானம் இருந்தாலொழிய பள்ளிக்கூட வேலையில் பிள்ளைகள் சரிவர பங்கெடுத்துக் கொள்ளமுடியாது. எல்லாவிதப் பாடங்களுக்கும் பாஷா ஞானமே மூலாதாரமாக இருப்பதால், பாஷை கற்பிக்கும் விஷயத்தில் நாம் அதிக சிரத்தையெடுத்துக் கொள்ளவேண்டிய தவசியமாகும். பாஷையைக் குறித்த பாடதிட்டம் பிள்ளைகள் அடையவேண்டிய முக்கிய தேர்ச்சிகளைக் கவனித்துப் பிறகு ஏற்படுத்தவேண்டும். வாய்மொழியாகத் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்லும் தேர்ச்சியும், எழுத்து மூலமாக சில சங்கேதங்களை (**Conventions**) அனுசரித்து எழுதக்கூடிய தேர்ச்சியும், யாதொருவிதமான சிரமமுமில்லாமல், புஸ்தகங்களைப் படித்து, அதன் படிப்பின் மூலமாக அறிவு விருத்தி செய்யக்கூடிய தேர்ச்சியும், ஓய்வு நேரங்களில் தானுகவே புஸ்தகங்களைப் படித்து, படிப்பினுல் சந்தோஷமடையக்கூடிய ஒரு மனோபாவத்தையு மடைய

வேண்டும். இவைகளை, சரியான பழக்கம் இல்லாவிடில் அடையமுடியாதாகையால் பயிற்சி அவசியம். பாடதிட்டத்தில், வாய்மொழியைச் சொற்பிழையில்லாமலும், பொருள் குற்றமில்லாமல் பேசவும் வேண்டியதற்கு ஏற்பாடு அவசியம். சப்பாஷணைகள், சிறிய நாடகங்கள் இவைகள் அவசியம். மௌன வாசிப்பு, பாட புஸ்தகமல்லாத இதர புஸ்தகங்கள் படிப்பு அவசியம். படங்களைப்பார்த்து, எழுதுதல், குறிப்புகளிலிருந்து வியாசம் எழுதுதல் இவைகளும் அவசியமாகும்.

இதுவரையிலும் குறிப்பிட்டபடி பாடதிட்டம் தயார்செய்வது பிள்ளைகளின் சுபாவத்தை அனுசரித்திருப்பதால் முழுப் பிரயோசனத்தைக் கொடுக்கக்கூடியது. இவ்வம்சங்களை ஒட்டி ஓர்மாதிரி பாடதிட்டம், ஒன்று சீக்கிரத்தில் காட்டப்படும். இதற்குத் தொடர்ச்சியாக அடுத்த மாதம், பிள்ளைகளின் திறமையை நாம் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு வேண்டிய காரிய நியமிப்பைப்பற்றி சில குறிப்புகள் கொடுக்கப்படும்.

ஆஸ்திக அன்பர்களுக்கு அருள் விருந்து!

நாங்கள் அவ்வச் சிறந்த காலங்களில் அன்பர்கள் இலவசமாக வழங்குவதற்காக ஆர்டர் கொடுப்பவர்களின் பெயர்களை அட்டையில் அச்சிட்டுக் கொடுக்கும் வழக்கம்போல் இவ்வருடமும் ஸ்ரீ முருகன் திருவருளால் ஸ்ரீ மகா ஸ்கந்தர் சஷ்டியை முன்னிட்டு ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசமும் ஸ்ரீ கந்தரலங்காரத்தில் சில பாக்களையும் சேர்த்து பாராயணத்திற்குப் பயன்படும்படி பாக்கட் அளவில் அடக்க விலையில் அச்சிட்டு தருகிறோம்.

100 பிரதிகளின் அடக்க விலை ரூ. 1—4—0

(தபாற் சிலவு அணா 0—6—0 தனி)

இம்மாதிரி பதிப்பித்தளித்ததைக் கண்ட பெரியோர் பலர் அனுப்பிய ஆசிகளைப் பெருமகிழ்ச்சியுடன் நாங்கள் வரப்பெற்றோம். அவைகளில்,

ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதுவதாவது:—“ * * தாங்கள் வெளியிட்ட குறுஞ்சுவடிகள் வந்தன. அவை மிகவும் பயனுள்ளவை. உலகில் கொள்ளையும், கொலையும், அரக்கமாயமும் தாண்டவமாடும் இந்நாளில் இத்தகைய புனித நூல்களில் உள்ள அறிவே பரவவேண்டும். நமது நாட்டில் ஆத்மிக ஞானமே உலகை உய்விக்கும் அருள் மருந்தாகும். அம்மருந்தை எவ்வளவு அள்ளிக்கொடுத்தாலும் மிகையாகாது. இந்த மாதிரி நல்ல அருள் வாக்குகளை நிரம்ப அச்சிட்டு வழங்குங்கள். அன்பு * * ”

முக்கிய கவனிப்பு:—1000 பிரதிகளுக்கு ஆர்டர் கொடுக்கும் அன்பர்களுக்கு தபால் செலவு இனம்! உங்கள் ஆர்டர்களை உடனே அனுப்பிப் பிரதிகளுக்கு முந்துங்கள்!!

விவரங்களுக்கு எழுதுங்கள்

முகுந்தன் அண்டு கம்பெனியார்

நூற்பதிப்பாளர்

வண்ணாரப்பேட்டை P.O., :: சென்னை

கலையும் கைத் தொழிலும்—IV

R. M. Savur, *Divisional Inspector of Schools.*

நம்மில் வெகு சிலருக்கே "உருவ மாதிரிகள்" (**Designs**) என்றால் என்ன என்பதைப் பற்றித் தெளிவான அபிப்பிராயங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் அரசாங்கத்தாரின் உருவமாதிரிப் பரீக்ஷையின் காரணமாக ஏற்பட்டவை. ஆதலால் பலர் உருவமாதிரி, என்றால் அழகு படுத்தல், உருவங்கள் அமைத்தல் அல்லது நிறங்கள் தீட்டுதல் என்ற பிழையான அபிப்பிராயங்கள் கொண்டிருக்கின்றனர்.

உருவமாதிரி என்பது ஓர் அடிப்படையானது. இதைப்பற்றி நாம் மூன்று விஷயங்களை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

(1) நாம் செய்யப்போகும் வஸ்து அதன் உபயோகத்திற்குத் தகுதியுள்ளதாக இருக்குமா?

(2) அந்த வஸ்து செய்வதற்கு வேண்டிய உபகரணங்களும் ஆயுதங்களும் எவை?

(3) செய்யப்பட்ட பிறகு நாம் பிரியக்கூடாத அளவுக்கு அவ்வளவு நன்றாக அந்த வஸ்து இருக்குமா?

வஸ்துவின் மேற் பக்கத்தை அழகு படுத்துவதென்பது இரண்டாவதாகத் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். மேற்கூறியவைகளை விளக்க ஒரு உதாரணமாக தோல்பை செய்யவேண்டுமென்று வைத்துக் கொள்வோம்.

வஸ்துவின் உபயோகம்

தோல்பை செய்வதற்கு முன் அதில் நாம் என்ன போட்டுக் கொள்ளப் போகிறோம் என்று நிச்சயிக்கவேண்டும். தோல் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் (1) மெல்லியதா, தடிப்பானதா? (2) மிருதுவானதா, கடினமானதா? (3) அளவுகள் எவை? இம்மாதிரியான பல விஷயங்களை நாம் யோசிக்கவேண்டும். ஒன்று அல்லது இரண்டு ரூபாய் நோட்டுகளையும், சில அணா நாணயங்களையும் போட்டுக் கொள்ளுவதற்கு எப்படிப்பட்ட தோல் பை செய்யலாம்? ட்ராம் வண்டிக்கோ, அல்லது சிற்றுண்டிக்கோ செலவு செய்வதற்குப் போதுமான சில்லறையைப் போட தபாற்காரன் பையைப்போல் செய்வது விந்தையாக அல்லவா முடியும்?

நமக்குச் சிறியதொரு பை வேண்டியிருப்பதால் மெல்லிய, ஆனால், அழுத்தமான, வளையக்கூடிய தோல்தான் அவசியமாகும். எனவே நாம் எடுத்துக்கொண்ட வேலைக்குத் தடியான மாட்டின் தோல் உதவாது. சட்டைக்குள் போடவேண்டிய எந்தப் பைக்கும் மாட்டின் தோல் உபயோகமாகாது. மூடி, பொத்தான் முதலிய பாகங்கள் பையின் நீள அகலத்தைப் பொருத்திருக்கும். உருவமாதிரியைத் தீர்மானிக்கும் போது மூடியையும் பொத்தானையும் எப்படி அமைக்கவேண்டும் என்பதையும் யோசிக்கவேண்டும். கீழே காணும் படங்களைப்பார்த்து எதன் உருவமாதிரி சிறந்தது என அறியலாம். இப்படங்களிலிருந்து நிறத்தால் அழகுபடுத்துவதைக் காட்டிலும் மூடியின் அளவு எவ்வளவு முக்கியமான விஷயம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.



படம் 1

Scale—Background—½" Square

எந்த விதமான தோலை உபயோகிக்கலாமென்பது நாம் செலவிடத் தயாராக இருக்கும் தொகையையும் பொருத்ததாகும். 'மொராகோ' முதலிய உயர்ந்த வகைத் தோல்கள் விலை அதிகம். மாணவர்களுக்குத் தகுதியானது பதனிடப்பட்ட ஆட்டுத் தோல்தான். இதைத் தங்கள் ஊரிலேயே ஒரு முழுத்தோல் ரூ. 1—8—0 வீதம் வாங்கலாம். தோல் வாங்கிய பிறகு அதைச் சரியான அளவுக்குக் கத்தரிக்க வேண்டும். படம் 1-A ல் காட்டப்பட்டிருக்கும் பையில் ஒரே அறை உள்ளது. இது அமுக்கும் பொத்தானால் (**Press button**) மூடப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. **E** ல் காட்டப்பட்டிருப்பது பையின் முன் பக்கம். **F** ல் காட்டப்பட்டிருப்பது மடிக்கப்படும் பின் பக்கம். ஆதலால் இவ்விரண்டு பாகங்களையும் படங்களில் காட்டப்பட்டிருப்பது போலக் கத்தரிக்க வேண்டும். தோலைச் சரியாகக் கத்தரிப்பதற்கு உதவியாக மாதிரி உருவங்களை மெல்லிய துத்தநாகத் தகட்டில் முதலில் கத்திரித்துக் கொள்ளவேண்டும்.

பாகங்களை இணைத்தல்

மேற்கூறிய தோல்பையின் பாகங்களை இணைப்பதற்குத் தகுதியான நூல் தையற்காரர்கள் உபயோகிக்கும் நூல்தான் கையாலோ, தையல் யந்திரத்தினலோ தைக்கலாம். கையால் தைப்பதற்கு இரண்டு அதிகமான கூரில்லாத ஊசிகள் சிறந்தவை. போதிய அளவுக்கு நூலை எடுத்து நூலின் ஒவ்வொரு நுனியையும் ஒவ்வொரு ஊசியின் காதில் நுழைக்க வேண்டும். பிறகு 'துவாரம் செய்யும் கருவி' (படம் 1 G) **(Stitch-pricker)**யால் தோல்களின் ஓரங்களில் சிறிய தைக்கும் துவாரங்கள் செய்ய வேண்டும். 'துவாரம் செய்யும் கருவி' இல்லாவிட்டால் செருப்புத்தைக்கும் ஊசியை உபயோகிக்கலாம். பள்ளிக்கூடக் குழந்தைகள் துவாரம் செய்யும் கருவியை உபயோகித்தல் நலம். இக்கருவியால் துவாரங்கள் செய்வதற்கு முன் அடிக்கோலால் தைக்கவேண்டிய இடத்தில் கோடு போட்டுக் கொள்ள வேண்டும். துவாரங்கள் செய்வதற்கு முன் தோலை ஈரத்துணியாலாவது ஈரமாயுள்ள கடற்பஞ்சினலாவது நனைத்துக்கொள்ள வேண்டும். பிறகு படம் 1-ல் காட்டியுள்ளது போல மாறி மாறி துவாரங்களின் வழியாக ஊசிகளைச் செலுத்த வேண்டும். ஒரு துவாரத்திலிருந்து அடுத்த துவாரத்திற்குப் போகுமுன் நூலின் இரண்டு நுனிகளையும் இறுக்கவேண்டும். ஊசியை துவாரத்தின் வழியே செலுத்தும்போது உள்ளே இருக்கும் நூலின் வழியே ஊசி போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்காகத்தான் ஊசிகள் அதிகக் கூராக இல்லாமலிருக்க வேண்டுமென்று முன்னமேயே கூறப்பட்டது. சாதாரண ஊசி கூராய் இல்லாமல் இருக்க அதை சாணைக் கல்லில் தேய்த்துக் கொள்ளலாம்.

அழகுபடுத்தும் விதம், பொத்தானை அமைக்கும் விதம் இவைகளை இனிவரும் கட்டுரைகளில் கவனிக்கலாம்.

நமது மாகாணத்தில் ஆரம்பக் கல்வி

S. T. ருமானுஜ அய்யங்கார், உதவி காரியதரிசி, S. I. T. U.

துரைத்தனத் திட்டம்.

நமது மாகாணத்தில் வழங்கும் ஆரம்பக்கல்வியைப் பற்றி 8-12-1936 ல் வெளிவந்த கல்வி *G. O.* 2611 மூலம் அறியலாம். அதன் படி கல்வித் திட்டத்தின் நோக்கம் குழந்தையின் முதல் ஐந்து வருஷக் கல்வியேயாகும். முற்றுப்பெற்ற ஆரம்பப் பள்ளிகளும், ஒன்று, இரண்டு வகுப்புகள் உள்ள கிளைப்பள்ளிகளும் மாத்திரம் இத்திட்டத்தில் அங்கீகாரம், உதவிபெற உரிமையுண்டு. இந்தக் கொள்கையை அமுலுக்குக் கொண்டுவர கீழ்க்கண்ட உபாயங்கள் கையாளப்பட்டு வரு கின்றன.

(*a*) சராசரி 20 பிள்ளைகள் ஆஜராக இருத்தல் வேண்டும்.

(*b*) ஒன்று, ஐந்து வகுப்புகளில் விதிகளின்படி நூற்றுக்கு இரு பத்தைந்து பிள்ளைகள் விகிதம் இருத்தல் வேண்டும்.

(*c*) பள்ளிக்கூடங்களில் பயிற்சிபெற்று, திருப்தியுள்ள ஆசிரியர் இருத்தல் வேண்டும்.

(*d*) நல்ல கண்காணிப்புக்குப் போதுமான கல்வி இலாகா உத் யோகஸ்தர்கள் இருத்தல்வேண்டும்.

(*e*) பாடதிட்டம் புதிய முறையில் அமைத்தல் வேண்டும்.

(*f*) உயர்தரப் பள்ளிகளில் கிராம வாழ்க்கைக்குத் தகுந்த படிப்பு அளித்தல் வேண்டும்.

இவ்விதமாக ஆரம்பக்கல்விக்குச் செலவாகும் 2 கோடி ரூபாய் படிக்கும் குழந்தைகளை உண்டாக்க சரியான முறையில் உபயோகப்பட வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் தேக்கமும், வியர்த்தமும் குறை யும் என்பது துரைத்தனத்தின் எண்ணம்.

1936—40 ல் சாதித்தது:

இக்கொள்கை அமுலுக்கு வந்த வகையில் கீழ்க்கண்ட பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. (*a*) 1936 மார்ச்சு மாதத்தில் 41,128 ஆண் பாடசாலைகளும், 4,807 பெண்பாடசாலைகளுமிருந்தன. அவைகளில் 1940 மார்ச்சு மாதத்தில் 36, 322 ஆண்பாடசாலைகளும், 4,474 பெண் பாடசாலைகளுமே இருக்கின்றன.

(*b*) 1936 ல் ஆண், பெண் பாடசாலைகளில் 2,873,404 பிள்ளை கள் இருந்தார்கள். 1940 ல், 2,997,498 பிள்ளைகள் இருக்கிறார்கள்.

(*c*) 5139 ஆரம்பப்பள்ளிகள் எடுக்கப்பட்டுவிட்டன.

(*d*) 124,094பிள்ளைகள் பள்ளிக்கு அதிகமாக வந்திருக்கின்றனர்

(*e*) முற்றுப்பெற்ற பள்ளிகள் 25,535 ல் இருந்து 30,451 பள்ளிகளாக வளர்ந்திருக்கின்றன.

(*f*) ஆண்பாடசாலைகளில் ஐந்தாவது வகுப்பில் 25.8 % ம், பெண்பாடசாலைகளில் 20-8 % ம் ஆக விருத்தியடைந்திருக்கிறது.

(*g*) 500, ம் அதற்கு மேலுள்ள ஜனத்தொகை உள்ள இடங்களில் பள்ளிக்கூடங்களில்லாமல் 2810 இடங்கள் உள.

(*h*) சர்க்கார் பள்ளிகளில் பையன் ஒன்றுக்கு ரூ. 11-8-0 ம், போர்டு பள்ளிகளில் ரூ 9-4-0 ம், எய்டெட் பள்ளிகளில் ரூ. 7-5-0ம் ஆங்கிலேயப், பள்ளிகளில் ரூ 63-0-0 ம் செலவழிக்கப்பட்டு வருகிறது.

(*i*) 107,499 ஆசிரியர்களில் 87885 ஆசிரியர்கள் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள்.

(*j*) பாடதிட்டங்களும், பாடதிட்டங்களை விளக்க படிப்பு வகுப்புகளும், கண்காட்சிகளும் ஏற்பட்டு வருகின்றன.

(*k*) ஆசிரியர்களின் ஊழியநிலை, சம்பளம், மான்யம் எல்லாம் உயர்த்தப்பட்டு வந்திருக்கின்றன.

(*l*) இன்ஸ்பெக்டர்கள் ஒவ்வொரு பள்ளியையும் மூன்று முறை பார்வையிட்டும், ஜில்லா கல்வி ஆபீஸரும், டிவிஷனன் உத்யோகஸ்தர்களும் இன்னும் அதற்குமேல் மேன்பார்வையிட்டும் ஊழல்களையும், விதிக்கு விரோதமான நடவடிக்கைகளையும் ஒழித்து, யுத்தம் புரிந்து வருகிறார்கள்.

(*m*) கல்வி கவுன்ஸில் ரத்துசெய்யப்பட்டு, தாலூகா கல்விக் கமிட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டு சரியாக வேலைசெய்ய வில்லை.

(*n*) டிபார்ட்மெண்டாரே ஆரம்பக்கல்வியின் பொறுப்பை வகிக்கின்றனர்.

(*o*) 2 கோடி ரூபாய் செலவை 500 க்கு மேற்பட்ட கல்வி இலாகா அதிகாரிகள் நன்கு மேற்பார்வையிட்டு, திட்டத்தின் கொள்கையை வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள்.

முடிவு :

இக்கொள்கையும், அதன் இலட்சியங்களும் அதை நடத்த அநுஷ்டிக்கும் முறைகளும், அதன் பலன்களும், சர்க்கார் பிரசுரப் புஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட விஷயம்.

ஆசிரியர்களும், ஆசிரிய சங்கங்களும், ஒவ்வொரு தாலூகாவிலும் உத்தியோகப்பற்றற்ற மகாநாடுகளில் இவ்விஷயங்களை நடைமுறையில் உறைத்துப் பரீட்சைசெய்து, அவைகளால் உண்டாயிருக்கும் நன்மை, தீமைகளையும் பாலர்கல்வி மூலமாயும் தென்னிந்திய ஆசிரிய சங்கத்தின் மூலமாயும் தெரிவித்தல் வேண்டும் என வேண்டிக்கொள்ளப்படுகிறது.

அடுத்தகட்டுரையில் இந்த உபாயங்களும், இலட்சியங்களும் சரியா என்பதைப் பரிசீலனை செய்யப்படும். (தொடரும்)

பதினேராவது தென்னிந்தியக் கல்விவாரம்

(1941ஞு அக்டோபர் 6வ முதல் 12வ வரை)

தென்னிந்திய ஆசிரிய சங்கத்தார் கல்வியில் ஈடுபட்டுள்ள மற்றச் சங்கத்தார், பிரமுகர்கள் முதலியவர்களின் ஆதரவைக்கொண்டு வருடந் தோறும் கல்வி வாரத்தைத் தென்னிந்தியா முழுவதும் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இவ்வருடம் நடத்தப்போவது பதினேராவது கொண்டாட்டமாகும். இவ்வருடத்திய கல்விவாரக் கமிட்டிக்குத் தலைவராக சென்னை சர்வ கலாசாலை உப அத்யக்ஷகர் ஸர். முகம்மது உஸ்மான், கே. ஸி. ஐ. இ. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கல்விவாரத்தின் நோக்கம்

பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்காகச் செய்யும் ஊழியத்தையும் பாடசாலைகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் எவை என்பதையும் பொது ஜனங்கள் சாதாரணமாக அறிவதில்லை. இக்குறையை நீக்குவதே கல்விவாரக் கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கல்வியின் அவசியம்.

சாதாரணமாகவே ராஜீயப் போராட்டங்கள், சண்டைகள் இவைகளுக் கிடையே பொது ஜனங்கள் கல்வியின் அவசியத்தை மறந்துவிடுவார்கள். இப்பொழுது நடக்கும் யுத்தத்தின் காரணமாக ஜனங்கள் சமூகத்தின் நாகரீகத்திற்கு இன்றியமையாதது கல்வி என்பதை முழுவதும் மறந்து விடக்கூடும். ஆதலால்தான் கல்வியில் ஈடுபட்டுள்ளோர் பொது ஜனங்களுக்கு அதன் அவசியத்தை இடைவிடாது வற்புறுத்தல் அவசியமாகும்.

இவ்வருடத்திய கல்விவார நிகழ்சிக்குறிப்பு

இவ்வருடத்தியக் கல்வி வாரத்தில் சர்ச்சைக்கு எடுத்துக்கொள்ளப்படும் விஷயம் "கல்வியும் யுத்தத்திற்குப்பின் நிர்மாணமும்" **(Education and Postwar Reconstruction)** என்பது. வாரத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு பின் வருமாறு:—

(6—10—41 முதல் 12—10—41 வரை)

அக்டோபர் 6வ—கல்வியும் தற்கால வேதனையும்.
,, 7வ—கல்வியும் யுத்தத்திற்குப்பின் சமூகமும்.
,, 8வ—கல்வியும் யுத்தத்திற்குப்பின் பிரஜையுர்மையும்.

அக்டோபர் 9உ—தேசிய சுகாதாரமும் யுத்தத்திற்குப்பின் கல்வியும்.
,, 10உ—தொழிற் பயிற்சியும் யுத்தத்திற்குப்பின் கல்வியும்.
,, 11உ—வீடும் யுத்தத்திற்குப்பின் கல்வியும்.
,, 12உ—குழந்தையும் புதிய உலகமும்.

கல்வி வாரத்தைக் கொண்டாடவேதேப்படி ?

1. நீங்கள் இருக்கும் வட்டாரத்திற்கு ஒரு கல்வி வாரக்கமிட்டி ஏற்பாடு செய்யுங்கள். அதற்கு அங்கத்தினர்களாகப் பெற்றோர்கள், மானேஜர்கள், போர்டு மெம்பர்கள், வியாபாரிகள், டாக்டர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் போலொத்த பிரமுகர்களைச் சேர்க்கவும்.

2. பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் செய்த வேலைகளைக்கொண்டு பொருட்காட்சி தயார் செய்யவும்.

3. பெற்றோர்களும், பொது ஜனங்களும் வந்து பார்க்கும்படி பள்ளிகூடங்களில் சௌகரியங்கள் கொடுக்கவும்.

4. கல்வி வாரத்தில் ஒவ்வொருநாளும் பொதுக்கூட்டம் கூடி கல்வி விஷயமாகத் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டுப் பேச சாதாரண ஜனங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவும்.

5. உங்கள் சுற்றுப்புறங்களில் "எழுதப்படிக்கத் தெரியாமை" என்னும் பெருங்குறையை அகற்ற ஏற்பாடுகள் செய்யவும்.

குறிப்பு:—மத்திய வாரக் கமிட்டியார் ஆங்கிலத்தில் சிறிய புத்தகமொன்றும் தமிழ், தெலுங்கு பாஷைகளில் "பெற்றோர்களுக்கு ஓர் வேண்டுகோள்" என்னும் பிரசுரத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள். இவை கல்வி வாரத்தைச் செவ்வனே உங்கள் ஊர்களில் நடத்த உபயோகமாகும். ஆங்கிலத்தில் 5 புத்தகங்களும் தமிழில் 100 பிரதிகள் அடங்கிய செட் ஒன்றுக்கு ரூ. 3/-மாத்திரம் தான் தேவையானவர்கள் மத்திய தென்னிந்தியக் கல்வி வாரக்கமிட்டி ஆபீஸ், 520, ஹைரோட், திருவல்லிக்கேணி மதராஸ் என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும். ஒரு செட்டுக்கு மேல் தேவையாக இருந்தால் அடக்க விலைக்குப் பிரசுரங்கள் அனுப்பப்படும்.

செய்தித்திரட்டு.

(1) ஆசிரியர் சங்கம், இடையக்கோட்டை.

15-8-41-ல் ஷை யூர் ஹிந்து உயர்தர ஆரம்ப பாடசாலையில் ஸ்ரீ K. ரகுபதி கோதண்ட விஜயராமனின் தலைமையின் கீழ் இச்சங்கம் கூடிற்று. அப்போது குருதேவர் கவீந்தரர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் மரணத்திற்காக ஒரு அனுதாபத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(2) எய்டெட் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர் யூனியன், பரமக்குடி

இந்த யூனியனின் இரண்டாவது ஆண்டுவிழா, 16-8-41-ல் ராமநாதபுரம் ஸ்ரீ M. ராஜா அய்யர், M. A., L. T., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் ஆரம்ப ஆசிரியர்களின் வறுமையை நீக்க துரைத்தனத்தார் எளிதில் செய்யக்கூடிய உபகாரங்களைக் கோரினார்: பெண் கல்வியில் துரைத்தனத்தாருக்குள்ள சிரத்தையை மெச்சிசால் பாகம் பெண்களில்லாத பள்ளிகளை மூடிவிடும்படி வெளியிட்ட உத்தரவு மிகவும் கடினமானதென்றும் குறையற்றப் பள்ளிக்கூடங்களையும் பாதிக்கும் எனறும் தெரிவித்தார். ஸ்ரீ டானியல் துரைசாமி அவர்கள் "ஆசிரியரும் ஐக்கிய உணர்ச்சியின் அவசியமும்" என்பதுபற்றி பிரசங்கம் செய்தார். தலைவர் முடிவுரையில் தென்னிந்திய ஆசிரியர் சங்கம் செய்துவரும் தொண்டை தெரிவித்து அனைவரும் அச் சங்க ஐக்கியக்காப்பு நிதியில் சேரவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார். யூனியன் தலைவர் வந்தனோபசாரம் கூற ஆண்டுவிழா இனிது முடிந்தது.

(3) பெற்றோர் சங்கம், கூமாபட்டி. (மதுரை ஜில்லா)

இச் சங்கத்தின் கூட்டமொன்று 5-8-41 ல் நடைபெற்றது. காலையில் மாணவர்களின் ஊர்வலம் நடந்தது. மாலையில் ஜில்லாபோர்டு அங்கத்தினர் ஸ்ரீ S. முத்துக்கருப்பத்தேவர் அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பாடசாலை விஸ்தரிப்புக்காகக் கட்டப்பட்ட புதிய கட்டிடம் திறக்கப்பட்டது. தலைமை ஆசிரியர் ஸ்ரீ R. லக்ஷ்மி நாராயணன் "கல்வியும் பெற்றோரும்" என்பதுபற்றி உபன்னியசித்தார். கிராமத்தில் கல்வியின் நிலைமை, படிப்பின்மையைக் குறைக்கும் வழிகள், கிராமத்தில் பெண்கள் நிலைமை, சிறுமிகளின் கல்வி

முதலிய விஷயங்களைப்பற்றி புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டினார். கிராமத்தார்கள் பாடசாலை விஷயத்தில் அதிக சிரத்தைகாட்டி வருவதைப் பாராட்டியும்,' பெற்றோர் சங்கம் கிராம அபிவிருத்திக்கு முக்கியஸ்தாபனம் என்பதுபற்றியும் பேசிமுடித்தார்.

---

(4) முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் யூனியன், கோடைக்கானல்.

30-8-41-ல் நடந்த ஆரம்ப ஆசிரியர் கூட்டத்தில் ஷை யூனியன் நிறுவப்பட்டது. ஸ்ரீ R. கிருஷ்ணய்யர் தலைமை உபாத்தியாயர், அக்கிராசனம் வகித்தார். யூனியன் விதிகள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டபின் 1941-42க்கு நிர்வாக சபையார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

---

(5) இந்தியக் கைத்தொழில் பொருட்காட்சி, தூத்துக்குடி.

செயின்ட்ஜோஸப் இன்ஸ்டிட்யூட், ரூரல் செண்டர், மங்களகிரி கைத்தொழிற்சாலை, இவைகளின் ஆதரவில் நடத்தப்பட்ட ஐந்தாவது கைத்தொழில் பொருட்காட்சி விழாவானது 28-7-41 ல் ஜனாப் அப்துல்லாகான் கோரி ஸாகிப் பகதூர், சப்ஜட்ஜ, தூத்துக்குடி, அவர்களால் திறக்கப்பட்டு, 10-8-41 ல் **Lieutenant Commander J. M. Blamforth, A. I. N. R.** அவர்கள் தலைமையில் முடிவடைந்தது. இவர் காட்சிசாலை வைத்திருந்த வர்களுக்கும், பொருட்காட்சியில் ஈடுபட்டவர்களுக்கும் பரிசு வழங்கினார்.

Lt. Comr. Blamforth பொருட்காட்சி கமிட்டியாரை, அநேக இடைஞ்சல்களுக்கிடையே, இப் பொருட்காட்சியை இவ் வருஷம் கொண்டாடினதுபற்றி மிகவும் போற்றினார்.

Mr. J. L. P. Roche Victoria, M. L. A. பொருட்காட்சி கமிட்டியின் தலைவர், இக் காட்சிக்குத் தலைமை வகித்ததற்காக அக்கிராசனருக்கு வந்தனம்கூறினார்.

---

(6) போர்டு ஆரம்ப ஆசிரியர்களின் யூனியன், கோவிலூர், செய்யார் தாலூகா.

17-8-41 ல் ஸ்ரீ. சக்கரவர்த்தி அய்யங்கார் அவர்கள் தலைமையில் யூனியனின் ஜனரல் பாடி மீட்டிங் நடைபெற்றது. 27 மெம்பர்கள் ஆஜரானார்கள்.

தீர்மானம். 1.—கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் இவ்வுலகி னின்றும் மறைந்ததற்காக ஆழ்ந்த அனுதாபம் காட்டுகிறது.

தீர்மானம். 2 —ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களின் உத்தரவு, L. No. 5328/40 41, தேதி 31-3-41 வாசிக்கப்பட்டது. இந்த உத்தரவு அனுகூலமாய் இல்லையென அபிப்பிராயப்பட்டு இது விஷயமாய் கல்வி இலாகா டைரக்டர் அவர்களுக்கு ஜில்லா போர்டு பிரசிடெண்டு மூலம் அப்பீல் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அப்பீல் தயாரிக்க 10 மெம்பர் கள் கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டது.

பிறகு "ஆரம்ப ஆசிரியர்களும் கிராமஸ்தர்களும்" என்பது பற்றி ஸ்ரீ வரதாச்சாரியார் பேசினர். பின்பற்றி ஸ்ரீ மணி அய்யர் பேசினர்.

---

(7) திண்டுக்கல் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், திண்டுக்கல்.

ஷை யூனியன் ஆதரவில் மூன்ருவது ஆசிரியர்கள் மகாநாடு 31-8-41ல் ஸ்ரீ K. கணேசய்யர், B. A., B. L. அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, மதுரை ஜில்லா போர்டு உபதலைவர் ஸ்ரீமான். கோ. வெங்கடாசலபதி அவர்கள் தலைமையின் கீழ் வெகு விமரிசையாய் நடந்தேறியது. சுமார் 200 பிரதிநிதிகளும், விஸிடர்களும் விஜயம் செய் திருந்தார்கள்.

தமிழாசிரியர் ஸ்ரீ கிருஷ்ணனந்தம் அவர்கள் "ஆரம்ப ஆசிரியர் களின் கடமையும் உரிமையும்" என்பது பற்றியும், தமிழ் பேராசிரியர் ஜனுப் அப்துல் காதர் அவர்கள் "ஆரம்ப ஆசிரியர்களின் தற்கால நிலைமை" என்பது பற்றியும் அரிய சொற்பொழிவு ஆற்றினர்கள்.

பிறகு 1941—42 க்குநிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்பின் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கியமான சில தீர்மானங்கள் :—

(1) கவிசிரேஷ்ட ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் இப்பாரத நாட்டை விட்டு மறைந்ததற்காக இச்சங்கம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிப்பதுடன் அவர் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைத் துதித்து நிற்கிறது.

(2) யுத்தத்தின் காரணமாய் விலைவாசிகள் அதிகரித்து ஆசிரி யர்கள் கஷ்டஜீவனம் செய்ய வேண்டியிருப்பதால் யுத்தப்படி கொடுக்க வேணுமாய் போர்டாரைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறது.

(3) 1-12-41 லிருந்து ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பள உயர்வைக் காலத்தில் கொடுக்க இப்பொழுதிருந்தே பூர்வாங்க ஏற்பாடு செய்ய போர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(4) போர்டு உயர்தர கல்லூரிகளில் செகண்டரிகிரேடு ஆசிரியர்களை நேர்முகமாக நியமிக்காமல் ஆரம்ப பாடசாலைகளிலிருந்து சீனியாரிடிப்பிரகாரம் நியமிக்கும்படி போர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(5) ஜில்லா சங்கம் ஏற்படுத்தும் விஷயமாய் சர்க்கார் புனராலோசனை செய்து சாதகமான உத்தரவிடவும், இச்சங்கத்தை தென்னிந்திய ஆசிரிய சங்கத்துடன் இணைப்பதற்கு உத்தரவு அளிக்க வேணுமாயும் சர்க்காரை வெகு பரிவுடன் கேட்டுக்கொள்ளுகிறது.

தலைவர் முடிவுரையில் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளை நன்குணர்ந்து தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பாரதநாட்டு எதிர்காலப் பிரஜைகளைத் தேசப்பற்று ஏற்படும்படியான முறையில் பயிற்சி செய்ய வேண்டுமென்றும், பலனை உத்தேசிக்காமல் கடமையைச் செவ்வனே செய்தால் பலன் தேடிக்கொண்டுவரும் என்றும், ஆகையால் தங்கள் கடமையைச் செவ்வனே செய்து இந்தப் புண்ணியத் திருப்பணியில் நல்ல ஆர்வமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றும் புத்திமதி கூறினார்.

யூனியன் தலைவர் வந்தனோபசாரம் கூற மங்கள. கீதத்துடன் மகாநாடு முடிந்தது.

---

(8) விருத்தாசலம் தாலுக்கா ஆரம்ப ஆசிரியர் சங்கம்—தொழுதூர்.

30-8-41 ல் இச்சங்கக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பார்த்தசாரதி ஐயங்கார் அவர்கள் தலைமை வகித்தார். அவர் முதல்வகுப்புக்கு "1 முதல் 5 வரையில்" பலவித எண்சார்டுகளைக்கொண்டு விரிவான பாடதிட்டமொன்று நடத்திக்காண்பித்தார். பிறகு அடிஷனல் ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சார்லஸ் அவர்கள் "1 முதல் 10 வரை எண்கள் கற்பித்தல்" என்பது பற்றிச் சில சுலபமான முறைகளை தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துக் கூறினார். காரியதரிசி வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

---

(9) பஞ்சாயத்து போர்டு ஸ்கூல், வையாவூர், பெற்றோர் சங்கம். (செங்கற்பட்டுஜில்லா)

5-9-41 ல் இச்சங்கம் கூடிற்று. தலைமை ஆசிரியர் ஸ்ரீ. ஸ்ரீனிவாஸாச்சாரியார் பெற்றோர் சங்கத்தின் நோக்கங்களையும் அனுகூலங்களையும் பற்றி விரிவாகப் பேசினார்.

'கடமையே கைப்பலனளிக்கும்' என்பதை மாணவர்கள் சம்பாஷணை ரூபமாக அனைவரும் மெச்சும்படி நடத்திக்காட்டினார்கள்.

பிள்ளைகளை ஒழுங்காக பள்ளிக்கு அனுப்பும் முறை என்ற விஷயத்தைப்பற்றி உதாரணங்களுடன் சீனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் அவர்கள் எடுத்துக்கூறினர். ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் அவர்கள் 'கல்வி' என்னும் விஷயத்தைப்பற்றி உதாரணங்களுடன் பேசினர். தலைவர் முடிவுரையில் இச்சங்கத்தின் அவசியத்தைப்பற்றி விரிவாகப் பேசினர்.

---

(10) காஞ்சீபுரம் தாலூகா, போர்டு உயர்தர எலிமெண்டரி பாடசாலை—உள்ளாவூர்.

2-9-41 ல் இப்பாடசாலையின் பொன்விழா (Golden Jubilee) கொண்டாட்டம் நடத்தப்பட்டது. சீனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. V. சுந்தரமய்யர் B. A., L. T., அவர்கள் தலைமை வகித்தார். மாணவ மாணவிகள் கும்மி, கோலாட்டம் சம்பாஷணை, உடற்பயிற்சி முதலியன நடத்திக்காட்டினர்கள்.

தலைவர் முடிவுரையில், இப்பாடசாலையை 2-9-1891 ல் இருபத்தெட்டு மாணவர்களோடு திறந்துவைத்த ஸ்ரீ. ஸ்ரீனிவாசராமானுஜாசாரியார் அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டதைப்பற்றியும், தற்காலம் இப்பாடசாலையில் 260 பிள்ளைகள் இருப்பதற்குக்காரணம் ஆசிரியர்களின் ஊக்கமும் ஒற்றுமையும் தான் என்றும் பாராட்டிப் பேசினர். புகைப்படம் எடுக்கப்பட்டபின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு விழா இனிது முடிந்தது.

---

(11) திருவண்ணமலை தாலுக்கா பஞ்சாயத்து போர்டு ஆசிரியர்கள் யூனியன்.

6-9-41 ந் தேதி மாலை 3 மணிக்கு, ஷை யூனியன் பொதுக் கூட்டம், ஷை யூர் டேனிஷ் மிஷன் உயர்தரப்பாடசாலைக் கட்டிடத்தில் ஸ்ரீ A. வெங்கட்ட சுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் கூடியது. கடவுள் வணக்கத்திற்குப்பின், கவியரசர் ரவீந்திரநாத்தாகூர் அவர்களின் பிரிவுக்காக 5 நிமிஷம் மௌனமாக இருப்பதின் மூலம் ஆசிரியர்கள் தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

பின்னர் 1941—42 ம் வருஷத்திற்காக யூனியன் நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று, வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

பத்திராதிபர் குறிப்புகள்

பாடபுஸ்தகப் பரிசலனை

பள்ளிக்கூடங்களில் பாடபுஸ்தகங்களை அடிக்கடி மாற்றுவது கூடாதென்றும், ஐந்து வருஷத்திற்கு ஒரு முறைதான் மாற்றலாமென்றும் சில வருஷங்களுக்கு முன்பு ஒரு உத்தரவு பிரப்பித்தது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்: பிறகு இவ்வுத்திரவை மாற்றி இரண்டு வருஷத்துக்கு ஒரு முறைதான் புஸ்தகங்களை மாற்றலாம் என்று உத்திரவிடப்பட்டது. ஆனால் இந்த உத்திரவு வந்த பிறகு ஒவ்வொரு வருஷமும் பாடபுத்தகங்கள் மாற்றும்படியான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாடதிட்டங்கள் மாற்றப்பட்டு வருகின்றன. 1939 ம்வருஷத்தில் வெளியிட்ட பூகோள பாடதிட்டம் 1941 ம் வருஷத்தில்முற்றிலும் மாற்றப்பட்டிருக்கிறது. இதனால் புதிய புஸ்தகங்களை உபயோகிக்கவேண்டி வருகிறது இது தவிர, ஆரம்ப பாடசாலையில் உபயோகித்துவரும் பாடபுஸ்தகங்களுக்கு இரண்டு வருஷ அங்கீகாரமேதான் அளிக்கப்பட்டிருக்கிறது. 1940ம் ஸ்ரீ புதிய திட்டத்தின் பிரகாரம் தயாரித்த பாடபுத்தகங்களுக்கு பாடபுஸ்தக பரிசீலனைக் கமிட்டியார் இரண்டு வருஷங்களுக்கே அங்கீகாரம் அளித்துள்ளதால், அப்புஸ்தகங்கள் எல்லாம் மறுபடியும் இப்பரிசீலனைக் கமிட்டியாருக்கு மறு அங்கீகாரத்துக்கு அனுப்பவேண்டுமாம். இது எதற்காக என்பது தெரியவில்லை. இவ்வாறு செய்வதினால், இவ்வருஷத்தில் உபயோகித்துவரும் புஸ்தகங்கள் பல மாற்றப்படவேண்டியதாயிருக்கும். பள்ளிக்கூடங்களுக்கும், புஸ்தக பிரசுரகர்த்தர்களுக்கு இதனால் பல இடையூறுகள் ஏற்படக்கூடும். இவ்விஷயங்களை நன்கு ஆலோசித்து, ஆரம்பப் பாடசாலைகளுக்கென்று தயாரிக்கும் புஸ்தகங்களுக்கு 5 வருஷ ஆங்கீகாரம் அளிக்கும் உத்திரவைப் பிரப்பிப்பார்கள் என்று நம்புகிறோம்.

11-வது கல்விவாரம்

11 வது கல்விவாரம் கொண்டாடும் முறையைப் பற்றி இவ்விதழில் சில குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முழுவிவரங்கள்

வேண்டுமானால் 2 அணு ஸ்டாம்பு அனுப்பி, கல்விவாரக் கமிட்டியால் வெளியிடப்பட்ட ஒரு குறிப்பு புஸ்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம். 'செல்வத்தில் சிறந்தது கல்விச் செல்வமே' என்பதின் கருத்தை நமது பொது மக்கள் உணருமாறு செய்வது ஆசிரியர்களின் பொறுப்பேயாகும். கல்விவாரத்தில், பெற்றோர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அழைத்து, அவர்கள் பாலர்களுக்கு என்ன விதத்தில் கல்வித்தேர்ச்சி அளிக்கப்படுவதென்பதை விளக்கிக்காட்டியும், பாலர்கள் செய்துவரும் வேலைகளைப் பொருட்காட்சி மூலமாகக் காட்டியும் அவர்களின் அன்பையும் ஆதரவையும் அடைய முயலவேண்டும். நம் நாட்டில் எழுத்தறியாமையை ஒழிக்கவேண்டும். கல்வி அபிவிருத்தியினால்தான் நாடு முன்னேற்ற மடையக்கூடும். இம்முன்னேற்றத்திற்கு ஆசிரியர்களே காரண புருஷர்களாவார்கள். 'பெற்றோர்களுக்கோர் விண்ணப்பம்' என்ற தலைப்பில் கல்விவாரக் கமிட்டியார்கள் ஒரு பிரசாரக்கடிதம் தயாரித்திருக்கிறார்கள். இது ஆங்கிலத்திலும், தமிழிலும் தயாரித்துள்ளார்கள். உங்களுக்கு எவ்வளவு தேவையோ அத்தனை பிரதிகளை அவர்களிடமிருந்து தருவித்துக்கொள்ளலாம். 200 பிரதிகளுக்கு விலை ரூ. 3 ஆகும். இவ்வருஷம் எல்லாவிடங்களிலும் கல்வி வாரத்தை சிறப்புற நடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.